வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 13.06.2025 வெள்ளிக்கிழமை | இதழ் : 164 | பக்கங்கள் : 12

### இந்திய விமான விபத்து:


## 205 பேரின் உடல்கள் மீட்பு ஒருவர் உயிர் தப்பியுள்ளார்

- மேலும் பலர் மரணித்திருக்கலாம் என்று அச்சம்
- குஜராத் முன்னாள் முதல்வரும் உயிரிழந்தார்

புதுடில்லி, ஜூன் 13

இந்தியாவில் 242 பேருடன் பயணித்த விமானம், புறப்பட்ட சில நிமிடங்களிலேயே விபத்துக்குள்ளனாது. இதில், உயிரிழந்தவர்களின் 205 சடலங்களை மீட்டுள்ளதாக இந்தியா அறிவித்துள்ளது. அத்துடன், உயிரிழந்தோர் எண்ணிக்கை

11



# தையிட்டி விகாரை காணிகள் உரிமையாளர்களுக்கு நட்டஈடு!

### அமைச்சர் சந்திரசேகர் அறிவிப்பு

- விகாரையை சூழவுள்ள காணிகள் விடுவிக்கப்படும்
- ஒரு மாத காலத்தில் பிரச்னையை தீர்க்கவும் முடிவு

யாழ்ப்பாணம், ஜூன் 13

**தையிட்டியில் திஸ்ஸ விகாரை அமைக்கப்பட்டுள்ள காணிகளின் உரிமையாளர்களுக்கு நட்டஈடு அல்லது மாற்று காணிகளை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.**

நேற்றைய தினம் நடந்த வலி. வடக்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்திலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வலி. வடக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடந்த இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர்,

"தையிட்டி விகாரை அமைந்துள்ள காணிகளை தவிர்த்து, அதனை சூழவுள்ள ஏனைய காணிகளை மாவட்ட செயலரிடம் கையளிக்க பணிக்கப்பட்டுள்ளது. பிரதேச செயலர் ஊடாக மாவட்ட செயலர் காணி உரிமையாளர்களுக்கு காணிகளை கையளிப்பார்.

"தனியார் காணிக்குள் விகாரை அமைக்கப்பட்டிருந்தால் அந்த காணிகளின் உரிமையாளர்களுக்கு காணியின் பெறுமதியை நட்டஈடாக வழங்க அல்லது மாற்றுக் காணியை வழங்குவது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும். விகாரை பிரச்னை நீண்டுகொண்டு செல்ல அனுமதிக்க முடி யாது. அதனை ஒரு மாத காலத்துக்குள் முடிக்க முடிவெடுத்துள்ளோம் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## யாழ். மாநகர சபையின் முதல்வர் தெரிவு இன்று!

### மூன்று கட்சிகள் பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர் தெரிவு இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. முதல்வர் பதவியை கைப்பற்ற மூன்று கட்சிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

45 உறுப்பினர்களைக்கொண்ட யாழ். மாநகர சபையில் ஆட்சி அமைப்பதற்கு 23 ஆசனங்கள் தேவை. எனினும், அண்மையில் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி தேர்தலில் யாழ். மாநகர சபையில்

11

## தெல்லிப்பழை மருத்துவமனையில் இன்று கவனவீர்ப்பு போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூன் 13


தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் நிர்வாகத்தை மாற்றவும் மருத்துவமனையின் இடர்பாடுகளை களையவும் கோரி அங்கு பணிபுரியும் மருத்துவர்கள் இன்று வெள்ளிக்கிழமை கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். அத்துடன், இந்தப் போராட்டத்தில் அனைத்துத் தரப்பினரையும்

11

## கற்கோவளம் படை முகாமருகே மனித எச்சங்கள் நேற்று மீட்பு!

- சி.தில்லைநாதன் -

வடமராட்சி, ஜூன் 13



கற்கோவளத்தில் காணி ஒன்றிலிருந்து மனித மண்டையோடும் எலும்புகள் சிலவும் மீட்கப்பட்டுள்ளன. முன்னர் இராணுவ முகாம் இருந்த காணியின் பின்புற காணியிலேயே இவ்வாறு மனித எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று முற்பகல்வேளை மாடுகளை

11

### உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி:

## தென்னிலங்கையின் முக்கிய கட்சிகள் பொது இணக்கப்பாடு

கொழும்பு, ஜூன் 13

ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்திக்கு பெரும்பான்மை இல்லாத உள்ளூராட்சி சபைகளில் கூட்டாக ஆட்சி அமைப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி, சிறீலங்கா பொது ஜன பெரமுன, ஐக்கிய தேசிய கட்சி, மக்கள் கூட்டணி ஆகிய கட்சிகள் இணக்கத்தை எட்டியுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க, சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம், ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அத்துகோரள, மக்கள் கூட்டணி

11

## எல்லைமீறும் இந்திய மீனவர்கள் கைதாவர்

### மீனவர்களுக்கு கடற்றொழில் அமைச்சர் உறுதியளித்தார்

மன்னார், ஜூன் 13

"நாட்டின் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களை கைது செய்வதுடன், அவர்களின் படகுகளும் கைப்பற்றப்படும் என்று கடற்றொழில் அமைச்சருடனான சந்திப்பில் அமைச்சர் இ. சந்திரசேகர் தமக்கு உறுதியளித்தார்", என்று வட மாகாண கடற் றொழிலாளர் இணையத்தின்

11

## மாணவருக்கு போதை மாத்திரை; இருவர் சாவகச்சேரியில் கைது!

தென்மராட்சி, ஜூன் 13

சாவகச்சேரியில் மாணவர்களுக்கு போதை மாத்திரைகளை விற்பனை செய்துவந்த இளைஞர்கள் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

போதைப்பொருள் குற்றச்செயல் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜெயரூபன் தலைமையிலான குழுவினர் நடத்திய தேடுதலில் சோலையம்மன் கோவில் பகுதியில் வைத்து இருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைதான இருவரும் நுணாவிலை சேர்ந்த 23,

11

### தையிட்டி போராட்டத்துக்கு எதிராக

## பலாலி பொலிஸார் தொடர்ந்த வழக்கு கிடப்பில் போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன் 13

தையிட்டியில் நீதிமன்றின் தடையை மீறி போராட்டம் நடத்தப்பட்டதாக தெரிவித்து பொலிஸார் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கு கிடப்பில் போடப்பட்டுள்ளதாக சட்டத்தரணிகள் தெரிவித்த னர்.

நேற்றைய தினம் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட இந்த வழக்கில், போராட்டம் நடத்தியவர்கள் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி என். சிறிகாந்தா , நா. காண்டீபன் ஆகியோர் சமர்ப்பணங்களை

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச தர தடகள மைதானம் வவுனியாவில் திறந்து வைப்பு!

வவுனியா, ஜுன் 13

வவுனியா - ஓமந்தையில் சர்வதேச தரத்திலான விளையாட்டு கட்டடத் தொகுதியுடன் கூடிய தடகள விளையாட்டு மைதானம் நேற்று வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் சுகத் திலகரத்ன இந்த மைதானத்தை திறந்து வைத்தார்.

இந்த மைதானம் நீண்ட காலமாக பயன்பாடின்றி காணப்பட்டிருந்த நிலையில், அண்மையில் இங்கு வந்த விளையாட்டு துறை அமைச்சர் அது தொடர்பில் ஆராய்ந்த பின்னர் மைதானத்தை திறந்து வைத்தார்.



இந்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ. திலகநாதன், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சரத் சந்திர, பிரதேச செயலாளர் இ. பிரதாபன், விளையாட்டுத் துறை அபிவிருத்தி பிரிவின் பணிப்பாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# கரையொதுங்கும் மாசு பொருட்கள்; ஆய்வு செய்ய 'நாரா'வுக்கு கட்டளை

யாழ்ப்பாணம் ஜுன் 13

நெடுந்தீவு, புங்குடுதீவு, சிலாபம் கடற்கரைகளில் ஒதுங்கியுள்ள பிளாஸ்ரிக், பொலித்தீன் தயாரிப்பு பொருட்கள் குறித்து உடனடியாக விரிவான ஆய்வை மேற்கொள்ளுமாறு தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிலையத்துக்கு (நாரா) கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் பணித்துள்ளார்.

இந்த பிளாஸ்ரிக் துகள்கள் கடற்கரையில் ஒதுங்கியிருப்பதன் மூலம் கடல் சூழலியல் மற்றும் கடற்கரையோர சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கு ஏற்படக்கூடிய பாதகமான தாக்கங்கள் குறித்தும் அமைச்சர் தீவிர கவனம் செலுத்தியுள்ளார்.

கடல் மாசடைதல், குறிப்பாக பிளாஸ்டிக் கழிவுகளால் ஏற்படும் மாசடைதல், சுற்றுச்சூழலுக்கும் கடல்வாழ் உயிரினங்களுக்கும் பெரும் அச்சுறுத்தலாக இருப்பதால், இந்த நிலைமை குறித்து உடனடியாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நாரா நிறுவன அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவித்தார்.

இந்த பிளாஸ்ரிக் துகள்கள் வந்த வழி, அவற்றின் தாக்கம் மற்றும் எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்களைத் தவிர்ப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஒரு விஞ்ஞான ரீதியான அறிக்கை சமர்ப்பிக்கவும் அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். (ஐ)

# வடக்கு கூட்டுறவு துறை மேம்பாடு; கிளிநொச்சியில் கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஜுன் 13

வடக்கு மாகாணத்தின் கூட்டுறவுத்துறையை மேம்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் "நிலைபேறான கூட்டுறவு மேம்பாடிற்கான புதிய வழியைத் தொடங்குதல்" என்ற தொனிப்பொருளில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதில், வட மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், வட மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர், மாகாண கூட்டுறவு ஆணையாளர், ஐந்து மாவட்டங்களின் கூட்டுறவு உதவி ஆணையாளர்கள், கூட்டுறவு துறைசார் சார் உத்தியோகத்தர்கள் கூட்டுறவு சங்கங்களின் தலைவர், கூட்டுறவுத்துறை சார்ந்தோர், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ)

# வடக்கில்தான் வீட்டுத் திட்டத்துக்கு அதிக நிதி நிதி வழுங்கப்படுகிறது!

வீடமைப்பு அமைச்சின் செயலர்

யாழ்ப்பாணம், ஜுன் 13

நாட்டில் வட மாகாணத்தில் தான் வீட்டுத் திட்டத்துக்காக அதிக தொகையான 18 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது என்று வடக்கு மாகாண நிதியும் திட்டமிடலும் காணி, மின் சக்தி, வீடமைப்பு நிர்மாண அமைச்சின் செயலாளர் அ. சோதிநாதன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் ஊடாக வீட்டுத் திட்டத்துக்குத் தெரிவான பயனாளிகளுக்கு முதல் கட்ட கொடுப்பனவு வழங்கும் நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி அதிகமாக வழங்கப்பட்டுள்ளமையால் வீட்டுத் திருத்தத்துக்காக 238 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தலா 5 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது.

வடக்கில் ஒவ்வொரு பயனாளிக்கும் தலா 18 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. நாட்டில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற எந்தவொரு வீட்டுத் திட்டத்திலும் இந்தளவு நிதி வழங்கப்படுவதில்லை. நாம் முதல் முறையாக அதிகளவு நிதியை வீட்டுத் திட்டத்துக்கு வழங்கியுள்ளோம். இதை நடைமுறைப்படுத்த உங்களின் பங்களிப்பை எதிர்பார்க்கின்றோம். அதைப்போல வீடுகளை கட்டி முடித்த பின்னர் நீங்கள் அதில் வாழவேண்டும் - என்றார். (ஐ)

# மத்திய வங்கியின் நிதி புலனாய்வு பிரிவை நீதிமன்றில் முற்பட உத்தரவு

கொழும்பு, ஜுன் 13

கணக்கியல் அறிக்கைகளை இதுவரையில் சமர்ப்பிக்கத் தவறியது தொடர்பில் சமர்ப்பணங்களை முன்வைப்பதற்காக எதிர்வரும் டிசெம்பர் 11ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு இலங்கை மத்திய வங்கியின் நிதி புலனாய்வு பிரிவுக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடு நேற்று கொழும்பு தலைமை நீதிவான் தனுஜா லக்மாலி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது சம்பவம் தொடர்பாக பிணையில் விடுவிக்கப்பட்ட பேர்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவன உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ் உள்ளிட்ட சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாகினர்.

சந்தேக நபர்கள் சார்பாக முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி சம்பத் மெண்டிஸ், நீதிமன்றத்தின் முன் சாட்சியங்களை சமர்ப்பித்து, இந்த வழக்கு இறுதியாக கடந்த வருடம் நவம்பரில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாக சுட்டிக்காட்டினார்.

வழக்குத் தொடுக்கப்பட்ட நிறுவனங்கள் தொடர்பான கணக்கியல் அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு இலங்கை மத்திய வங்கியின் நிதி புலனாய்வு பிரிவுக்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்த போதிலும், அந்த அறிக்கைகள் இன்றுவரை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி சட்டத்தரணி, வழக்குத் தொடர வாதிகளுக்கு விருப்பமில்லை என்றால் இந்த வழக்கு தொடர்பாக தீர்மானமொன்றை எடுக்குமாறு நீதிவானிடம் கோரினார்.

இந்தக் குற்றம் தொடர்பாக சட்டமா அதிபர் ஏற்கனவே தனது கட்சிக்காரர்களுக்கு எதிராக மூன்று பேர் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு முன் வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

முந்தைய நீதிமன்றம் தொடர்புடைய அறிக்கைகளை சமர்ப்பிக்க பிறப்பித்த உத்தரவு குறித்து இலங்கை மத்திய வங்கியின் நிதி புலனாய்வுப் பிரிவிடமிருந்து எந்த பதிலும் கிடைக்கவில்லை என்று குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரி நீதிமன்றத்திற்குத் தெரிவித்தார்.

முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை பரிசீலித்த கொழும்பு தலைமை நீதவான், டிசெம்பர் 11ஆம் திகதியில் நீதிமன்றத்தில் முன்னிலையாகி சமர்ப்பணங்களை முன்வைக்குமாறு இலங்கை மத்திய வங்கியின் நிதி புலனாய்வுப் பிரிவுக்கு உத்தரவிட்டார்.

இந்த வழக்கில் பேர்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனம், அந்நிறுவனத்தின் இயக்குநர் அர்ஜுன் அலோசியஸ், மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் உள்ளிட்ட ஏழு பேர் சந்தேக நபர்களாகப் பெயரிடப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சங்கானை பிரதேச செயலக ஒருங்கிணைப்பு கூட்டம் நேற்று



யாழ்ப்பாணம், ஜுன் 13

சங்கானை பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று வியாழக்கிழமை ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சிறீ பவானந்தராஜா தலைமையில் நடைபெற்றது.

குறித்த கூட்டத்தின் ஆரம்பத்தில் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய கூட்டம் முன்னெடுக்கப்படாமையால் சில நிமிடங்கள் குழப்ப நிலை ஏற்பட்டது. எனினும், பின்னர் சுமுகமாக நடைபெற்றது.

இந்த ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பிரதேச செயலர் திருமதி கவிதா உதயகுமார், பாராளுமன்ற உறுப்பினர் ஜெ. ரஜீவன், பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச செயலக பதவி நிலை அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், திணைக்களங்களின் அதிகாரிகள், பொலிஸார், பிரதேச மருத்துவ அதிகாரி, சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# பாடசாலையில் மரம் முறிந்து மாணவன் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜுன் 13

பாடசாலை கட்டடம் மீது மரம் முறிந்து விழுந்ததில் மாணவன் ஒருவர் உயிரிழந்தார். 16 மாணவர்கள் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று இரத்தினபுரி - பலங்கொடையில் இடம்பெற்றுள்ளது.

கடும் காற்று காரணமாக மரம் முறிந்து வகுப்பறை மீது விழுந்ததிலேயே இந்த அசம்பாவிதம் ஏற்பட்டது. இதில், மாணவர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்திருந்தார். காயமடைந்த 16 மாணவர்கள் பலாங்கொடை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# சிறப்பிதழ் வெளியீடு நாளை!

யாழ்ப்பாணம், ஜுன் 13

இலக்கியவெளி சஞ்சிகையின் நீலாவணன் சிறப்பிதழ் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அம்மன் வீதி, நல்லூரில் அமைந்துள்ள எங்கட புத்த கம் இல்லத்தில் நடைபெறவுள் ளது.

பேராசிரியர் சி. சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வெளியீட்டுரையை பேராசிரியர் க. சிறீ கணேசன், சிறப்புரையை பேராசிரியர் வ. மகேஸ்வரன், மதிப்பீட்டுரைகளை இ. இராஜேஸ் கண்ணன், சி. விமலன் ஆகியோரும் நிகழ்த்துவர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
13.06.2025 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், வைகாசி 30
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.
E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## எவர் அதிகாரத்துக்கு வரினும்...!

மின்சார கட்டணம் 15 வீதத்தால் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இதனை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கண்டித்திருப்பதுடன், அரசாங்கம் நாட்டு மக்களுக்கு துரோகம் இழைத்து விட்டதாகத் தெரிவித்திருக்கிறார். சர்வதேச நாணய நிதித்தின் நிபந்தனைகளுககு அமைவாகவே மின்சார கட்டணம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

அண்மையில், அரசாங்கம் வாகன இறக்குமதியை தளர்த்தியிருப்பதும் நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு உட்பட்ட ஒன்றுதான். ஆனால், வாகனங்களுக்கான இறக்குமதித் தீர்வை பல மடங்காகியிருப்பதால் அவற்றின் விலை மும்மடங்காகியிருக்கிறது. வாகன இறக்குமதியை அனுமதிப்பதில் அரசாங்கத்துக்கு விருப்பம் இருந்திருக்கவில்லை. ஆனால், விருப்பத்தின் அடிப்படையில் செயல்பட முடியாது என்பதுதான் விடயம்.

கோட்டாபய ராஜபக்ஷ பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்காக நாணய நிதியத்தை நாடிச் செல்லும் யோசனையை நிராகரித்தார். அவரின் பொருளாதார ஆலோசகர்கள் அவ்வாறான தவறான ஆலோசனையையே அவருக்கு வழங்கியிருந்தனர். பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்து நாடு வங்குரோத்து நிலைமையை அடைந்தபோது கோட்டாபய பதவியிலிருந்து வெளியேற வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து எவரும் எதிர்பாராத வகையில் நாட்டை பொறுப்பேற்ற ரணில் விக்கிரமசிங்க உடனடியாகவே சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்பாடு தொடர்பில் ஆராய்ந்தார். நாணய நிதியத்துடனான உடன்பாட்டை தொடர்ந்தே நாட்டின் பொருளாதார நெருக்கடி மெதுவாக அகலத் தொடங்கியது. நிலைமைகள் மெதுவாக பழைய நிலையை நோக்கி நகரத் தொடங்கின. மக்கள் அரசுக்கு எதிரான மனோபாவத்திலிருந்து மெதுவாகக் கலையைத் தொடங்கினர்.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் நாட்டை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்லும் பொறுப்பை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பொறுப்பேற்றது. அடிப்படையில், அநுர குமார திஸநாயக்க தலைமையிலான ஜே. வி. பியின் கடந்த காலம் சர்வதேச நாணய நிதியத்துக்கு எதிரானது. கடந்த காலத்தில் நாணய நிதியத்துடனான உடன்பாட்டை ஜே. வி. பி. கடுமையாக எதிர்த்ததுடன் அவ்வாறான நகர்வுகளை நாட்டைக் காட்டிக் கொடுக்கும் முயற்சி என்றே விமர்சித்திருந்தது. ஆனால், மேடைகளில் பேசுவது போன்று நாட்டை ஆட்சி செய்ய முடியாது.

இலங்கையின் பொருளாதார நிலைமை நெருக்கடியை நோக்கி சரியாமல் தற்போதைய நிலையில் நாட்டை கொண்டு செல்ல வேண்டுமாயின் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒத்துப்போகத்தான் வேண்டும். அந்த நிபந்தனைகளை நடைமுறைப்படுத்தத்தான் வேண்டும். எவர் ஆட்சியில் இருந்தாலும் இதுதான் நிலைமை.

இந்த விடயத்தில் அரசாங்கத்தை எதிர்த்துப் பேசுபவர்கள் ஒரு வேளை அதிகாரத்துக்கு வந்தாலும் அவர்களும் நாணய நிதியத்தை பின்தொடரத்தான் வேண்டும். தங்களின் வாக்கு வங்கி அரசியலுக்காக எதனையும் பேசலாம். ஆனால், நாட்டின் உண்மையான நிலைமையோ வேறு. உலக அரசியலில் விருப்பு வெறுப்புகள் ஒரு விடயமே அல்ல - யதார்த்தங்களே முக்கியமானது.

# "அரியாலை மனித புதைகுழி அகழ்வு கைவிடப்படக்கூடாது"

யாழ்ப்பாணம், ஜூன் 13

செம்மணி - அரியாலை சித்துப்பாத்தி மனித புதைகுழி விவகாரம் கைவிடப்படும் விடயமாகவன்றி உண்மையையும் நீதியையும் நிலைநாட்டத்தக்கதாக முன்னகரவேண்டும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

செம்மணி - அரியாலை மனித புதைகுழி தொடர்பில் அந்த சங்கம் விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே மேற்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இலங்கை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் யாழ்ப்பாண குடாநாடு இருந்தபோது காணாமல் ஆக்கப்பட்ட பலருக்கு இன்று வரை என்ன நடந்தது என்பது தெரியாத அவல நிலை தொடர்கிறது. இந்த நிலையே இறுதிப் போரின் போதும் நிகழ்ந்துள்ளது. அவர்களது உறவினர்கள் பல ஆண்டுகளாக தொடர்ச்சியாக போராடிவருகின்றார்கள்.

போருக்கு பின்னான சூழ்நிலையில் யார் எந்த வலுவான சத்தியும் இயற்கை நீதிக்கு மாறாக நிகழ்ந்த அவலங்களை மறைக்க நினைத்தாலும் அவை ஏதோவொரு விதத்தில் வெளிக்கிளம்பிய வண்ணமே உள்ளன.

செம்மணி புதைகுழி விவகாரமும் இப்போது அவ்வாறு வெளிக்கிளம்பி நீதித்துறையின் கட்டுப்பாட்டில் உரிய வகையில் முன்கொண்டு செல்லப்படுகிறது. இந்த நிலை வலுவாக்கப்பட வேண்டும் என்பதுடன் புதைகுழிகளின் நீட்சி அறியப்படவும் வேண்டும் என்பதும் மிகவும் அவசியமானது.

எந்தவொரு காரணத்தை முன்னிறுத்தியும் புதைகுழி அகழ்வுகள் இடைநிறுத்தப்படக்கூடாது. உரிய நிதியை உரிய காலத்தில் விடுவித்தல், மனித புதைகுழி அகழ்வுப் பிரதேசங்களுக்கு உரிய பொலிஸ் பாதுகாப்பை வழங்குதல், அகழ்வுப் பணிகளில் ஈடுபடும் தரப்பினர் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்காதிருத்தல் என்பன அவசியமானவையென எமது ஆசிரியர் சங்கம் கருதுகின்றது.

புதைகுழி விவகாரங்களை சரியான முறையில் அணுகுவது இலங்கைத்தேசத்தின் முன்னேற்றத்துக்கு அவசியமானது.

அவலமாக மரித்த உயிர்களின் ஆத்மாக்கள் அமைதிகொள்ளும் போது தான் நாடு முன்னோக்கிச் செல்ல முடியும். மாறாக அந்த ஆத்மாக்களின் அவலக்கதைகள் தொடர்ந்தும் மூடிமறைக்கப்பட்டால் அவற்றினால் விளையும் பாதிப்புக்கள் நாட்டை மேலும் மோசமானநிலைக்கு இட்டுச் செல்லும்.

இதனையுணர்ந்து செம்மணி மனித புதைகுழி விவகாரம் கைவிடப்படும் விடயமாகவன்றி உண்மையையும் நீதியையும் நிலைநாட்டக்கூடிய வகையில் முன்கொண்டு செல்லப்படும் விடயமாக மாறவேண்டும் என்பதை யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினராகிய நாம் வலுவாக பதிவுசெய்கின்றோம் - என்றும் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# ஒருதொகை வெடிமருந்து குருநகரில் கைப்பற்றல்!

யாழ்ப்பாணம், ஜூன் 13

குருநகரில் ஒரு தொகை டைனமற் வெடிமருந்துகள் நேற்றுமுன்தினம் கைப்பற்றப்பட்டன.

யாழ்ப்பாணம் பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாகவே இந்த வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டன. மீட்கப்பட்ட வெடிமருந்துகளை மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள் ளன.

சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படாத நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்

## சிறைக்கு போதை மாத்திரை கொண்டுசென்ற பெண் கைது!

கொழும்பு, ஜூன் 13

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கணவருக்கும் சகோதரனுக்கும் போதை மாத்திரைகளை கொண்டு சென்றார் என்று கூறப்படும் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் - மஹவிலாச்சியை சேர்ந்த 25 வயது பெண்ணே இவ்வாறு கைதானார்.

கைதான பெண்ணின் கணவரும் சகோதரரும் போதை மாத்திரைகள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், அவர்களை பார்க்க உணவு எடுத்துச் சென்ற பெண்ணிடம் சோதனை நடத்தப்பட்டது. அப்போது, உணவு பொதியில் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன. இதையடுத்து, சிறை அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டார். (ஐ)

## ஏ-9 வீதியில் விபத்து ஒருவர் உயிரிழப்பு!

கண்டி, ஜூன் 13

யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.


கண்டி - கட்டுகஸ்தோட்டை நகரில் நேற்று இடம்பெற்ற இந்த விபத்து குறித்து மேலும் அறிய வருவதாவது,

சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள், ஓட்டோவை மோதியது. இதன்போது, ஓட்டோவிலிருந்த சாரதி படுகாயமடைந்தார்.

கண்டி தேசிய மருத்துவமனையில் உடனடியாக அவர் சேர்க்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

இந்த சம்பவத்தில் 58 வயது நபரே உயிரிழந்தார். விபத்தையடுத்து பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூன் - 13 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம் - வைகாசி 30
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : துவிதியை




**மேடம்**
கணவன் - மனைவிக்குள் இருந்து வந்த மோதல்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மனதில் இனம்புரியாத பயம் வந்துப்போகும். நன்றி மறந்த சிலரை நினைத்து வருத்தப்படுவீர்கள். அதிகாரிகளுடன் வளைந்து கொடுத்துப் போவது நல்லது.

**மிதுனம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். சகோதரர் வகையில் உதவிகள் உண்டு. வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் வரும். உத்தியோகத்தில் புது அதிகாரி உங்களை மதிப்பார்.

**கடகம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். ன்னேறும் நாள்.

**சிம்மம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். ஆடம்பர செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். புது தொழில் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள்.

**கன்னி**
பால்ய நண்பர்கள் ஒருவரை சந்திப்பீர்கள். அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**துலாம்**
தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். வியாபாரத்தில் மாறுபட்ட அணுகுமுறையால் லாபம் ஈட்டுவீர்கள். உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும்.

**விருட்சிகம்**
கணவன் - மனைவிக்குள் அன்பு ஆதரவு அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். தோற்றப் பொலிவு கூடும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். நன்மை நடக்கும் நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் அளவாக பழகுங்கள். பொறுமை தேவைப்படும்.

**மகரம்**
எடுத்த வேலைகளை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் உருவாகும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும்.

**கும்பம்**
எதையும் சாதிக்கும் தன்னம்பிக்கை பிறக்கும். பெற்றோரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் விரும்பி வருவார்கள். உத்தியோகத்தில் புது பொறுப்புகளை ஏற்பீர்கள்.

**மீனம்**
கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். உறவினர், வெளிவட்டாரத்தில் செல்வாக்கு உயரும். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். சக ஊழியர்களால் மதிக்கப்படுவீர்கள்.

# கல்மடுக்குளத்தையும் அதன் கீழான வயல்நிலங்களையும் விடுவியுங்கள்

## ரவிகரன் எம். பி. வலியுறுத்தல்

வவுனியா, ஜூன் 13

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தமிழர்களின் பூர்வீக கல்மடுக்குளத்தையும் அதன் கீழான வயல்நிலங்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு வவுனியா மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்கவிடம் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

அத்தோடு, தமிழ் மக்கள் நீண்டகால இடப்பெயர்வைச் சந்தித்த இடங்கள், தற்போது பயன்பாடின்றி பற்றைக்காடுகளாகக் காணப்படுகின்றபோது, அந்த இடங்களை வனப்பகுதியாகக் கருதி, வனவளத் திணைக்களம் ஆக்கிரமிக்கும் செயல்பாட்டுக்கும் ரவிகரன் வன்மையாக கண்டனம் தெரிவித்தார்.

வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ரவிகரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கல்மடுக்குளம் என்றொரு குளம் இருப்பின், அக்குளத்தின் கீழ் மக்களுக்கு வயல்காணிகள் கட்டாயம் இருந்திருக்கும். எனவே, அக்குளத்தின் கீழ் மக்களுக்கு வயல் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இவ்வாறிருக்கும்போது வனவளத் திணைக்களம் மக்களுக்குரிய வயல்காணிகளை பகிர்ந்தளிக்க முடியாது எனக் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் ரவிகரன் கூறினார். (எ)

# நடுக்காட்டுக்குள் இருப்பதால் எம்மால் கல்மடுக்குளத்தை விடுவிக்க முடியாது

## வனவளத் திணைக்களம் விதண்டாவாதம்

வவுனியா, ஜூன் 13

கல்மடுக்குளம் என வனவளத் திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள பிரதேசம் நடுக்காட்டுக்குள், ஐந்து கிலோ மீற்றர் தூரத்தில் காணப்படுகிறது. அக்குளம் நடுக்காட்டுக்குள் காணப்படுவதால், அது வனமாக பாதுகாக்கப்படும். எனவே, அதனை விடுவித்துக் கொடுக்க முடியாத நிலை காணப்படுவதாக வனவளத் திணைக்கள அதிகாரி கூறினார்.



வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதேவேளை, வனவளத் திணைக்கள அதிகாரியின் இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்த ரவிகரன் எம். பி., கடந்தகால அசாதாரண சூழ்நிலை காரணமாக குறித்த பகுதியில் குடியிருந்த, விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்ட தமிழ் மக்கள் அப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்துவிட்டதாகத் தெரிவித்தார்.

இவ்வாறு இடம்பெயர்வைச் சந்தித்த மக்கள், அவர்களுடைய பகுதிகளில் மீளக் குடியமர்த்தப்படாத நிலை காணப்படுகிறது. அத்தோடு, அவர்கள் விவசாய நடவடிக்கைக்காகப் பயன்படுத்திய குளங்களும், குளங்களுக்குக் கீழான வயல்நிலங்களும் விடுவிக்கப்படாத நிலையில் உள்ளன.

கல்மடுக்குளம் என்ற பகுதியில் மக்களால் முன்பு விவசாயம் செய்யப்பட்டமையால் தான் தற்போதும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் இக்குளம் தொடர்பான பதிவுகள் காணப்படுகின்றன.

எனவே, அந்தக் காணிகளை அரசாங்கம் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அதைவிடுத்து இவ்வாறாக திணைக்களங்கள் மக்களின் காணிகளை தொடர்ந்தும் அபகரித்து வைத்திருந்தால் மக்கள் எங்கே செல்வார்கள்?


கடந்த காலங்களில் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி என பாரியளவில் மக்களால் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு, நெல் வடக்கிலிருந்து தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்த வரலாறுகளே காணப்படுகின்றன.

இவ்வாறு மக்களால் நெற்செய்கைக்காக பயன்படுத்தப்பட்ட பெருமளவான காணிகளை அரச திணைக்களங்கள் ஆக்கிரமித்துள்ள நிலையே தற்போதுள்ளது- என்றார். (எ)

# விகாரை வடிவிலான பதாகை அகற்றம்

முல்லைத்தீவு, ஜூன் 13

முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளை பகுதியில் நேற்று முன்தினம் இரவு திடீரென தனியார் காணி ஒன்றில் இனம் தெரியாதோரால் காட்சிப்படுத்தப்பட்ட பௌத்த விகாரை வடிவிலான பதாகை - இனம்தெரியாத நபர்களால் அகற்றப்பட்டது. இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (எ)



# இந்தியாவிலிருந்து மீளத்திரும்பியவர்களின் சுமுகமான மீள் ஒருங்கிணைப்புக்கு உதவி

யாழ்ப்பாணம், ஜூன் 13

இந்தியாவிலிருந்து மீளத் திரும்பியவர்களின் சுமுகமான மீள் ஒருங்கிணைப்புக்கான உதவித் தொகை, யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க.சிறீமோகனன், இணைப்பாளர் இ. பிரபாகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யு. என். எச். சி. ஆர். நிறுவனத்தால் தெரிவு செய்யப்பட்டு இதற்கான உதவித் தொகை தலா ஒருவருக்கு 90, 000 ரூபாய் வீதம் வேலணை மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் மீளத் திரும்பிய ஆறு பேருக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரக் கட்டண உயர்வினால் உணவுப் பொருள் விலை எகிறும்!

## தேசிய நுகர்வோர் முன்னணி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 13

**மின்சாரக் கட்டணங்களில் சமீபத்திய 15 சதவீத அதிகரிப்பு நாடு முழுவதும் உணவுப் பொருட்களின் விலை உயர்வுக்கு வழிவகுக்கும் என்று தேசிய நுகர்வோர் முன்னணி தலைவர் அசேல சம்பத் எச்சரித்தார்.**

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய சம்பத், மின்சாரக் கட்டண உயர்வு தவிர்க்க முடியாமல் உணவு உற்பத்தி மற்றும் விநியோகச் செலவுகளைப் பாதிக்கும் என்றும், இதனால் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயரும் என்றும் கூறினார்.

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுடன், பல குடும்பங்கள் சத்தான உணவை வாங்க முடியாமல் தவிக்கும் என்றும், இதனால் மக்களிடையே தொற்றா நோய்கள் மேலும் அதிகரிக்கும் என்றும் அவர் கவலை தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்த அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று சம்பத் வலியுறுத்தினார். இந்த அதிகரிப்புகளின் சுமைகளைத் தாங்குவதிலிருந்து அப்பாவி நுகர்வோரைப் பாதுகாக்க விலைக் கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்த அதிகாரிகள் ஏதேனும் திட்டங்களைக் கொண்டிருக்கிறார்களா என்று அவர் கேள்வி எழுப்பினார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அரசாங்கம் அளித்த நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள் குறித்தும் அவர் அரசாங்கத்தை விமர்சித்தார்.

ஜனவரி மாதத்தில், மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னதாக, அரசியல் ஆதாயத்திற்காக



மட்டுமே அரசாங்கம் மின்சாரக் கட்டணங்களை 20 சதவீதம் குறைத்தது. இந்தக் குறைப்புக்கு எந்த சாத்தியமான நிதி அடிப்படையும் இல்லை, மேலும் இது தவிர்க்க முடியாமல் இலங்கை மின்சார சபையை மேலும் நட்டத்தில் தள்ளியது என்று அவர் குற்றம் சாட்டினார்.

மின்சார சபையால் ஏற்பட்ட நிதி இழப்புகளுக்கும், சமீபத்திய கட்டண உயர்வு மூலம் பொதுமக்கள் மீது சுமத்தப்பட்ட சிரமங்களுக்கும் இப்போது யார் பொறுப்பேற்க வேண்டும் என்று அரசாங்கத்திடம் அவர் கேள்வி எழுப்பினார். (அ)

# சிறுமியை வன்புணர்ந்தவருக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை

கொழும்பு, ஜூன் 13

கல்கிஸை பகுதியில் 16 வயதான சிறுமியை தனது ஓட்டோவில் ஏற்றி பாலியல் வன்புணர்வுக்குட்படுத்திய இரண்டு குழந்தைகளின் தந்தையான 37 வயதுடைய ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரட்ண மாரசிங்க 10 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனையும், ரூ.30,000 அபராதமும் விதித்துள்ளார்.

மேலும், பாதிக்கப்பட்டவருக்கு ரூ.300,000 இழப்பீடு வழங்கவும், அபராதம் மற்றும் இழப்பீட்டை செலுத்தத் தவறினால் குற்றவாளிக்கு கூடுதலாக இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கவும் நீதிபதி உத்தரவிட்டார்.

குற்றச்சாட்டுகளில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்ட பின்னர், தண்டனை விதிக்கப்படுவதற்கு முன்பு நீதிமன்றத்தின் பிரதிவாதி இப்போது இரண்டு குழந்தைகளின் தந்தையாக இருப்பதால், சிறியதாக தண்டனையை விதிக்குமாறு தண்டனை விதிக்கப்படுவதற்கு முன்பு நீதிமன்றத்தில் பாதிக்கப்பட்ட தரப்பின் சார்பில் கோரப்பட்டது.

பாதிக்கப்பட்ட தரப்பினர் கோரியதால் இவ்வளவு சிறிய தண்டனையை விதிக்க நீதிமன்றத்துக்கு சட்டபூர்வ அதிகாரம் இல்லை என்றும், ஆனால் பிரதிவாதியின் சட்டத்தரணி முன்வைத்த வாதங்களின்படி, பிரதிவாதிக்கு முந்தைய தண்டனைகள் அல்லது நிலுவையில் உள்ள பிற வழக்குகள் இல்லாததால் அதிகபட்ச தண்டனையை சட்டத்தால் விதிக்க முடியும் என்றும் நீதிபதி சுட்டிக்காட்டினார்.

பாதிக்கப்பட்ட சிறுமி தனது தாயுடன் பிரதிவாதியின் ஓட்டோவில் பயணம் செய்த போது அவர் தனது கைத்தொலைபேசி எண்ணைக் கொடுத்து, பின்னர் அவளை ஒரு ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

சிறுமி தேசிய அடையாள அட்டை இல்லாத ஒருவர் என்பதை உணர்ந்த ஹோட்டல் நிர்வாகம், அவளுக்கு தங்குமிடம் வழங்க மறுத்தது. இந்நிலையில் ஆள் நடமாட்டம் இல்லாத இடத்திற்கு அழைத்துச் சென்று பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தியதாக முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது. (அ)

# ஹல்துமுல்ல பிரதேச சபையின் ஆட்சி தேசிய மக்கள் சக்தி வசம்!

கொழும்பு, ஜூன் 13

பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று தேசிய மக்கள் சக்தி ஹல்துமுல்ல பிரதேச சபையின் ஆட்சியை அமைத்துள்ளது.

தேசிய மக்கள் சக்தி யின் ஜகத் குமார ராஜபக்ஷ 11 வாக்குகளைப் பெற்று அதன் தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

துணைத் தவிசாளர் பதவியை சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த ஆர். முருகேசன் பெற்றுள்ளார்.

2025 உள்ளூராட்சித் தேர்தலைத் தொடர்ந்து, ஹல்துமுல்ல பிரதேச சபையில் தேசிய மக்கள் சக்தி 09 இடங்களையும், ஐக்கிய மக்கள் சக்தி 06 இடங்களையும் பெற்றிருந்தன.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் பொதுஜன பெரமுன தலா 01 ஆசனங்களைப் பெற்றிருந்தன.

தமிழ் முற்போக்குக் கூட்டணி மற்றும் மக்கள் கூட்டணி தலா 02 ஆசனங்களைப் பெற்றிருந்தன. (அ)

# போதையில் பொலிஸ் அதிகாரியின் கையைக் கடித்த நபர் கைதாகினார்

கொழும்பு, ஜூன் 13

பொலிஸ் அதிகாரியின் வலது கையைக் கடித்து காயப்படுத்தியதாக கூறப்படும் சந்தேக நபரொருவர் கேகாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் கேகாலை - ஹெட்டிமுல்ல பிரதேசத்தில் வசிக்கும் 47 வயதுடையவர் ஆவார்.

சம்பவத்தன்று, கேகாலை, ரன்வல பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகள் இருவர், இரவு 10 .00 மணியளவில் சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றை நிறுத்த முயன்றுள்ளனர்.

ஆனால் அந்த மோட்டார் சைக்கிளின் சாரதி பொலிஸ் உத்தரவையும் மீறி மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றுள்ளார்.

பின்னர் பொலிஸ் அதிகாரிகள் இருவரும் பொலிஸ் மோட்டார் சைக்கிளில் சந்தேக நபரை துரத்திச் சென்று பிடித்துள்ளனர்.

இதன்போது சந்தேக நபர் பொலிஸ் அதிகாரி ஒருவரின் வலது கையைக் கடித்து காயப்படுத்தியுள்ளார்.

கேகாலை பொலிஸ் போக்குவரத்து பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரி ஒருவரே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

இதனையடுத்து சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாரின் விசாரணையில் சந்தேக நபர் மதுபோதையில் இருப்பதாக தெரியவந்துள்ளது.இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கேகாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# போதைப்பொருளுக்கு அடிமையானோருக்கு புனர்வாழ்வு வழங்குவதற்கு புதிய தங்குமிடம்

கொழும்பு, ஜூன் 13

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ள இளைஞர்களுக்கான சிகிச்சை மற்றும் புனர்வாழ்வளித்தல் நிலையத்திற்கான தங்குமிட வசதிக்கான புதிய கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ மேற்கண்ட அறிவிப்பை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை, போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ள நபர்களுக்கான வதிவிட மற்றும் வதிவிடமற்ற சமுதாய அடிப்படையிலான முறைகளில் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வளித்தல் சேவைகளை வழங்கி வருகின்றது.

அதன்கீழ் போதைப்பொருள் பாவனையால் ஏற்பட்டு இயலாமைகளுக்குட்பட்ட 21 வயதுக்குக் குறைவான இளைஞர்களுக்கு வேறான சிகிச்சை நிலையமொன்று மாம்பிட்டியவத்த, ஹந்தெஸ்ஸ, பேராதனை ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றது.

குறித்த வயதிலுள்ளவர்களின் உளச்சமூகப் பண்புகள் மற்றும் போதைப்பொருள் பாவனையுடன் தொடர்புடைய நடத்தைகள் பற்றிக் கவனம் செலுத்தி சிகிச்சையளிக்கும் போது அந்தந்த நபர்களுக்குரிய வேறான சிகிச்சை சேவைகளுக்குப் பொருத்தமான போதியளவு இடவசதிகள் தேவையெனக் கண்டறியப்பட்டுள்ளது.

தற்போது குறித்த நிலையத்தில் 35 நபர்களுக்கு மாத்திரமே தங்குமிட வசதிகள் காணப்படுகின்றமையால், காத்திருப்புப் பட்டியலில் இருக்க வேண்டிய நிலைமை தோன்றியுள்ளது.



அதனால், போதைப்பொருள் பாவனைக்குட்பட்ட சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான சிகிச்சை வாய்ப்புக்களை விரிவுபடுத்தி துரிதப்படுத்துவதற்கு இயலுமாகும் வகையில் க்ளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து 110 மில்லியன்கள் செலவிட்டு பேராதனை சிகிச்சை நிலைய வளாகத்தில் புதிய வதிவிடக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றார். (அ)

# குரங்குகள் சரணாலயம் அமைக்கத் தீர்மானம்

கொழும்பு, ஜூன் 13

குரங்குகளால் ஏற்படும் சேதங்களைக் கட்டுப்படுத்துவதற்கு அவற்றை தடுத்து வைக்கும் இடங்களை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேற்படி முன்னோடித் திட்டம் மாத்தளை மாவட்டத்தில் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக வனவிலங்கு பாதுகாப்பு சங்கம் தெரிவிக்கிறது.

நாட்டின் முதலாவது குரங்கு பதுகாப்பு சரணாலயம் மாத்தளை மாவட்டத்தில் களுகங்கை நீர்த்தேக்கத்திற்கு அருகில் அமைப்பதற்கு இனம் காணப்பட்டுள்ளது. நீர், உணவு மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளுக்கு 150 ஹெக்ரேயர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கு 283.87 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதிகரித்து வரும் மனித - விலங்கு மோதல்கள், உடைமை சேதம் மற்றும் பயிர் சேதம் காரணமாக பொருளாதார நட்டங்கள் ஏற்பட்டு வருகின்றன.

முன்மொழியப்பட்ட குரங்கு தடுப்பு சரணாலயத்திற்கான பரிந்துரைகளை வனவிலங்கு பாதுகாப்பு அமைச்சு வழங்கியுள்ளது. மேலும் மாத்தளை மாவட்ட ஒழுங்கிணைப்பு குழுவின் அனுமதியும் இதற்குப் பெறப்பட்டுள்ளது.

மாத்தளை மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவர் கமகெதர திஸாநாயக்க, மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் சரத் அபேக்கோன், மாத்தளை மாவட்ட செயலாளர் பிரசன்ன மதநாயக்க ஆகியோரின் தலைமையில் இது தொடர்பாக குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் நேற்று ரஷ்யாவுக்கு பயணம்



கொழும்பு, ஜூன் 13

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று வியாழக்கிழமை காலை ரஷ்யாவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார்.

இந்த விஜயத்தின்போது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்ய உள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க பல சொற்பொழிவுகளில் கலந்து கொள்ளவும் உள்ளார்.

22 ஆம் திகதி நாடு திரும்பவுள்ளார். (அ)

# மீண்டும் தலைதூக்கும் கொரோனா தொற்று!

## இதுவரை இருவர் பலி!!

கொழும்பு, ஜூன் 13

**நாட்டில் தற்போது பரவி வரும் கொவிட் திரிபினால் பாதிக்கப்பட்டு இதுவரை இரண்டு பேர் உயிரிழந்துள்ளதாக வடமேல் மருத்துவ பீடத்தின் தலைமை மருத்துவப் பேராசிரியர் துஷாந்த மெதகெதர தெரிவித்துள்ளார்.**

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-இலங்கை தொற்று நோயியல் பிரிவு தகவலின்படி, சுவாச நோயாளிகளில் 9 வீதம் முதல் 13 வீதம் வரை தற்போது புதிய கொவிட் திரிபினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த கொவிட் தொற்று மிகக் குறைந்த தீவிரத்தன்மை கொண்டது. இதனால் ஏற்படும் தாக்கம் மிகக் குறைவு. ஆனால் 65 வயதுக்கு மேற்பட்ட நோயாளிகளுக்கும் பலவீனமான நோயெதிர்ப்பு சக்தி கொண்டவர்களுக்கும் இது தீவிரமாக இருக்கலாம். இவ்வாறானவர்கள் இது தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும்.

இலங்கையில் இரண்டு மரணங்கள் நிகழ்ந்துள்ளன. இருவருக்கும் நோய்கள் இருந்தன. அதைத் தவிர, தற்போது எங்களுக்கு எந்த ஆபத்தான நிலைமைகளும் இல்லை, எனவே தேவையற்ற அச்சம் தேவையில்லை.

ஆனால் குறிப்பிட்ட தரப்பினர் இது குறித்து விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியம்-என்றார். (அ)

# கைதிக்கு பொதுமன்னிப்பு சட்ட நடவடிக்கை வேண்டும்

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதி அநுரவுக்குக் கடிதம்

கொழும்பு, ஜூன் 13

ஜனாதிபதி பொது மன்னிப்பை சட்டவிரோதமாகப் பயன்படுத்தி அனுராதபுரம் சிறைச்சாலையிலிருந்து கைதி ஒருவரை விடுவித்த சம்பவம் தொடர்பாக தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என தெரிவித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

அந்தக் கடிதத்தில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதியிடம் இரண்டு கோரிக்கைகளை முன்வைத்துள்ளது.

அந்தவகையில் இச் சம்பவம் குறித்து முழுமையான மற்றும் பாரபட்சமற்ற விசாரணையை நடத்தி, சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் அடையாளம் கண்டு, குற்றவாளிகள் மீது தேவையான ஒழுக்காற்று அல்லது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சீர்திருத்த நடவடிக்கைகளில் அவதானம் செலுத்தி, சிறைச்சாலைகள் திணைக்களத்தின் செயல்பாடுகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை வலுப்படுத்துதல் வேண்டும்.

சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதில் ஜனாதிபதி, நீதி அமைச்சு மற்றும் ஏனைய தொடர்புடைய அதிகாரிகளுக்கு முழு ஆதரவை வழங்க இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தயாராக இருப்பதாகவும், சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவதற்கும், நேர்மையுடனும் நியாயத்துடனும் மக்களுக்கு சேவை செய்வதை உறுதி செய்வதற்கும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உறுதி பூண்டுள்ளதாகவும் அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# வாய்த்தர்க்கம் மோதலாக மாறியதில் ஒருவர் கொலை

கொழும்பு, ஜூன் 13

மத்துகம, அம்பருல்லகஹவத்த பகுதியில் தந்தை மற்றும் மகன் மீது, பிறிதொரு குழவொன்று மேற்கொண்ட வாள் வெட்டுத் தாக்குதலில் மகன் உயிரிழந்தார்.

நேற்று முன் தினம் இரவு இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட வாய்த் தகராறு மோதலாக மாறியதைத் தொடர்ந்து குறித்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலில் படுகாயமடைந்த தந்தையும் மகனும் களுத்துறை, நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், மகன் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் யடிதொல, நவுத்துடுவ பகுதியைச் சேர்ந்த 23 வயதுடையவர் என்றும், காயமடைந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த 51 வயதுடையவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தந்தையின் சகோதரருடன் நபரொருவர் மதுபான விருந்தொன்றின்போது வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ள நிலையில், இரு தரப்பினரும் அங்கிருந்த வெளியேறிச் சென்றுள்ளனர். பின்னர், சம்பவத்தின் அடிப்படையில் மேற்கூறிய பகுதியில் மற்றொரு வாக்குவாதம் ஏற்பட்டது.

இதன்போது, மகனும் தந்தையும் தகராறில் தலையிட்டுள்ளனர்.

தகராறில் ஈடுபட்ட மற்றொரு நபர் கூர்மையான ஆயுதத்தைக் கொண்டு தாக்கி காயப்படுத்தியுள்ளார். பின்னர் பிரதேச மக்கள் காயமடைந்தவர்களை களுத்துறை நாகொட வைத்தியசாலையில் அனுமதித்துள்ள நிலையில், மகன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சம்பவத்திற்குப் பின்னர் சந்தேக நபர் தப்பிச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர். குற்றத்தில் ஈடுபட்ட சந்தேக நபரைக் கைது செய்ய மத்துகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மனைவியை தீ வைத்து எரித்த கணவன் கைது!

கொழும்பு, ஜூன் 13

சிலாபம் - அம்பகந்தவில பகுதியில் மனைவியை, கணவன் தீ வைத்து எரித்த சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மனைவிக்கு தகாத உறவு இருப்பதாகச் சந்தேகித்து இருவருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் குறித்த கணவர் அவரது மனை வியை தீ வைத்து எரித்துள்ள தாகவும் தெரிவிக்கப்படு கின்றது.

குறித்த மனைவி சிலாபம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவத்தில் 39 வயதுடைய உயிரிழந்த பெண் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கணவர் நேற்று முன் தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார். சிலாபம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# அக்குறணை பிரதேச சபை ஐக்கிய மக்கள் சக்தியிடம்!

கொழும்பு, ஜூன் 13

அக்குறணை பிரதேச சபையில் பெரும்பான்மை வாக்குகளுடன் வெற்றி பெற்று ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியமைக்க வுள்ளது.

அதன்படி, நேற்று நடைபெற்ற அக்குறணை பிரதேச சபையின் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் இஸ்திஹார் இமாதுதீன் பெரும்பான்மை வாக்குகளை பெற்று தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

நடைபெற்ற வாக்குப் பதிவில் 30 மொத்த உறுப்பினர்களில் 16 உறுப்பினர்களின் வாக்குகளை அவர் பெற்றார்.

அவரை எதிர்த்து போட்டியிட்ட தேசிய மக்கள் சக்தியின் தாரிக் அலி 13 வாக்குகளைப் பெற்றார்.இதற்கிடையில் சமிந்த தில கரத்ன 18 வாக்குகளைப் பெற்று துணைத் தலைவர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அதே நேரத்தில் தேசிய மக்கள் சக்தி கட்சியின் வசந்தகுமார 11 வாக்குகளை மட்டுமே பெற்றார். (அ)

# விலங்கு கணக்கெடுப்பு அறிக்கை வெளியீடு!

கொழும்பு, ஜூன் 13

மார்ச் 15 அன்று நடத்தப்பட்ட தேசிய விலங்கு கணக்கெடுப்பின் அறிக்கை நேற்று வெளியிடப்பட்டது.

இது விவசாய அமைச்சினால் அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டது.

அதன்படி, நாடு முழுவதும் நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் பின்வரும் காட்டு விலங்குகளின் எண்ணிக்கை காட்டப்பட்டுள்ளது:

டோக் குரங்குகள்- 5.17 மில்லியன்

சாம்பல் நிற குரங்குகள் -1.74 மில்லியன்

மர அணில் - 2.66மில்லியன்

மயில்கள் - 4.24 மில்லியன். (அ)

# நிலந்த ஜயவர்தனவுக்கு எதிரான மனு ஒக்ரோபர் 14 விசாரணைக்கு!

கொழும்பு, ஜூன் 13

கடந்த 2019 இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல் தொடர்பில் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்தும் அதனைத் தடுக்கத் தவறியதற்காக அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக குற்றவியல் குற்றச்சாட்டுகளை முன்வைக்க நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபர் மற்றும் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை ஒக்ரோபர் 14ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

சமூக மற்றும் மத மையத்தின் பணிப்பாளர் ரொஹான் சில்வா மற்றும் உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் பாதிக்கப்பட்ட சுராஜ் நிலங்க ஆகியோர் குறித்த மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

இதற்கமைய, குறித்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போதே, மேல் முறையீட்டு நீதிமன்றம் அதன் பரிசீலனைத் திகதியை அறிவித்துள்ளது. (அ)

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 76 மீனவர் கடற்படையால் கைது!

கொழும்பு, ஜூன் 13

தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட 20 டிங்கி படகுகள் மற்றும் 76 நபர்களை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

மே 26 முதல் ஜூன் 7 வரையான காலப்பகுதியில் கடற்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் மூலம் இவர்கள் கைது செய்யப்பட்டதாக கடற்படை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய யாழ்ப்பாணம், கட்டைக்காடு, புதுமாத்தளன், திருகோணமலை, கல்லடிச்சேனை, கொக்கிளாய், சேப்பல் தீவு, கொட்பே, பொடுவகட்டு, குச்சவெளி, மட்டக்களப்பு ஆகிய கடற்பரப்புகளை உள்ளடக்கிய வடக்கு மற்றும் கிழக்கு கடற்படை கட்டளைகளால் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகளை பயன்படுத்தியமை, மின்சார விளக்குகளைப் பயன்படுத்தி இரவில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டமை உள்ளிட்ட மேலும் சில குற்றச்சாட்டுகளுக்கு அமைவாக குறித்த சந்தேக நபர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினர் 20 டிங்கி படகுகளையும் 17 தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகளையும் பறிமுதல் செய்துள்ளனர்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம், திருகோணமலை, ஈச்சலம்பற்று, முல்லைத்தீவு, குச்சவெளி, கொட்பே மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் உள்ள கடற்றொழில் மற்றும் நீரியல் வள திணைக்கள அலுவலகங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைச்சாலைகள் திணைக்கள ஊடக பேச்சாளர் இராஜினாமா

கொழும்பு, ஜூன் 13

சிறைச்சாலைகள் திணைக் களத்தின் ஊடகப் பேச்சா ளராகப் பணியாற்றிய சிறைச் சாலைகள் ஆணையாளர் காமினி பி.திசாநாயக்க, தனது இராஜினாமா கடிதத்தை சிறைச்சாலைகள் பதில் ஆணை யாளரிடம் சமர்ப்பித்துள் ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிதி மோசடி குற்றச்சாட்டின் கீழ் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டு, அநுராதபுரம் சிறைச்சா லையில் தடுத்து வைக்கப்பட் டிருந்த டபிள்யூ.எச்.அத்துல திலகரத்ன என்பவர், 2025 வெசாக் பண்டிகையை முன் னிட்டு ஜனாதிபதி பொது மன் னிப்பின் கீழ் சட்டவிரோதமாக விடுதலை செய்யப்பட்டமை தொடர்பில் எழுந்து வரும் சர்ச் சைகளை கருத்தில் கொண்டு காமினி பி.திசாநாயக்க, தனது இராஜினாமா கடிதத்தை சமர்ப் பித்துள்ளதாக தெரிவிக்கப்ப டுகிறது. (அ)


# சிறை திணைக்களத்திற்கு புதிய ஊடகப் பேச்சாளர்!

கொழும்பு, ஜூன் 13

சிறைச்சாலைகள் திணைக்க ளத்தின் புதிய ஊடகப் பேச்சா ளராக சிறைச்சாலைகள் ஆணை யாளர் ஜகத் வீரசிங்க நியமிக் கப்பட்டார்.

சிறைச்சாலைகள் திணைக் களத்தின் ஊடகப் பேச்சாளராக கடமையாற்றிய காமினி பி. திசாநாயக்க, சிறைச்சாலைகள் பதில் ஆணையாளரிடம் தனது இராஜினாமா கடிதத்தை நேற்று சமர்ப்பித்திருந்தார். இதனையடுத்து, சிறைச்சா லைகள் திணைக்களத்தின் புதிய ஊடகப் பேச்சாளராக ஜகத் வீர சிங்க நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

# ஜேர்மன் வெளியுறவு அமைச்சருடன் ஜனாதிபதி அநுரகுமார முக்கிய பேச்சு



பேர்லின், ஜூன் 13

ஜேர்மன் கூட்டாட்சி குடியரசுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸ நாயக்க, பேர்லினில் ஜேர்மன் வெளியுறவு அமைச்சர் ஜொஹான் வடபுலை சந்தித்து கலந்துரையாடினார்.

அரசாங்க முன்னுரிமைக ளின் அடிப்படையில் வர்த்த கம், டிஜிற்றல் பொருளாதாரம், முதலீடு மற்றும் தொழில் பயிற்சி வாய்ப்புகள் உட்பட இரு நாடுகளுக்கும் இடையி லான ஒத்துழைப்பை விரிவுப டுத்துவதற்கான புதிய வழிகள் குறித்து இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், ஜேர்மனிக்கான இலங்கைத் தூ துவர் வருணி முத்துகுமாரண, இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் அர்ஜுன ஹேரத், வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் வர்த்தக அமைச்சின் பணிப்பாளர் நாயகம், சுகீஷ்வர குணரத்ன மற்றும் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)

# கெஹலியவின் வீட்டில் பணிபுரிந்த பெண் கைது!

கொழும்பு, ஜூன் 13

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் வீட்டில் பணிபுரிந்த பணிப் பெண் ஒருவர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதி காரிகளால் கைது செய்யப் பட்டார்.

சுகாதார அமைச்சுக்கு பெய ரளவிலான நியமனங்களை வழங்கியதன் ஊடாக அரசாங்க சம்பளம் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவுகளை தவறாகப் பயன்படுத்தியதாக முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக் வெலவிடம் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு நடத்தி வரும் விசாரணைளுக்கு அமையவே, குறித்த பெண் கைது செய்யப்பட்டதாக ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

எம்பிலிபிட்டிய பிரதே சத்தை சேர்ந்த பெண்ணே இவ் வாறு கைது செய்யப்பட்டுள் ளார் எனவும் அவரை நீதிமன் றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டு வருவதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

# கொள்கலன்கள் விடுவிப்புக்கு ஜனாதிபதியும் முழு உடந்தை!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன் 13

**ஆரம்பத்தில் இருந்து பரிசோதனை செய்யப்படாமல் விடு விக்கப்பட்டுள்ள 323 கொள்கலன்கள் தொடர்பான உண்மை தன்மையை மறைப்பதற்கு ஜனாதிபதியும் முற்பட்டுள்ளார் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குற்றம் சுமத்தியுள்ளார்.**

ஐக்கிய மக்கள் சக்தி கட்சி காரியாலயத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந் துகொண்டு கருத்து தெரிவிக் கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-பரிசோதனை செய்யப்ப டாமல் விடுவிக்கப்பட்டுள்ள 323 கொள்கலன்கள் தொடர் பான உண்மைத்தன்மையை மறைப்பதற்கு ஜனாதிபதியும் முற்பட்டுள்ளார். எனவேதான் ஊழல் இடம்பெறும் அரச துறைகளை பெயரிடும்போது ஜனாதிபதி இலங்கை சுங்கத்தை தெரிவிக்காமல் விட்டார்.

சுங்கம் நிதி அமைச்சின் கீழ் இருப்பதால் ஜனாதிபதி திட்ட மிட்டே அதனை மறைத்துள்ளார்.

இலங்கை சுங்கத்தில் இருந்து எந்தவித பரிசோதனையும் இல் லாமல் விடுவிக்கப்பட்ட 323 கொள்லன்கள் தொடர்பில் பல வேறு கருத்துக்கள் தெரிவிக்கப் பட்டு வருகின்றன.

ஆனால் அரசாங்கம் இது தொடர்பில் எந்த அறிவிப்பை யும் விடுக்காமல் இருக்கிறது. இந்த கொள்கலன் விடுவிக்கப் பட்ட விடயத்தை அரசியல் வாதிகள் யாரும் வெளிப்படுத்த வில்லை.

மாறாக சுங்க தொழிற்சங் கமே இது தொடர்பில் ஜனவரி மாதம் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி இருந்தது. அதில் கட்டாயம் பரிசோதனை செய்யப்பட வேண்டும் என இனம் காணப்பட்டிருந்த 323 கொள்கலன்கள் பரிசோத னையின்றி விடுவிக்கப்பட்டுள் ளதாகவும் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சுங்கத் தொழிற்சங்கம் ஜனா திபதிக்கு அனுப்பிய கடிதத்தை அடுத்தே இது தொடர்பில் ஏனைய தரப்பினருக்கும் இவ் வாறான சம்பவம் ஒன்று இடம் பெற்றிருப்பதை தெரிந்து கொள்ள முடிந்துள்ளது.

ஆனால் சம்பவம் இடம் பெற்று 6 மாதங்களுக்கு பின் னர் சுங்கத்தின் பணிப்பாளர் ஒருவர் கடந்த வாரம் ஊடக சந் திப்பொன்றை நடத்தி, குறித்த கொள்கலன்கள் விடுவிப்பில் எந்தவித மோசடியும் இடம் பெறவில்லை எனவும் அது தொடர்பில் மேலிடத்தில் இருந்து யாரும் அறிவிக்க வில்லை என்றும், அந்த கொள் கலன்களில் இருந்த பொருட் கள் என சில பொருட்களின் பட்டியலையும் தெரிவித்தி ருந்தார். ஆனால் குறித்த அதிகா ரிக்கு கீழ் பணிபுரியும் ஊழியர் களே, மோசடி இடம்பெற்றுள் ளதாக தெரிவித்து, ஜனாதி பதிக்கு கடிதம் அனுப்பி இருக்கிறார்.

இது தொடர்பில் பலரும் வினவியபோது எந்த பதிலை யும் தெரிவிக்காமல் இருந்த சுங்க பணிப்பாளர், 6 மாதங்க ளுக்கு பின்னர் குறித்த கொள் கலன்களில் ஆபத்தான பொருட் கள் எதுவும் இல்லை என தெரி விப்பதை எவ்வாறு உறுதிப் படுத்த முடியும்? ஏனெனில் தற்போது அந்த பொருட்கள் விடுக்கப்பட்டு முடித்துள்ளன.

அதேநேரம் அநுராதபுரத் தில் இடம்பெற்ற தேசிய பொசன் தினத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனா திபதி, ஊழல் மோசடி இடம் பெறும் அரச துறைகளை பெய ரிட்டு குறிப்பிட்டிருந்தார். ஆனால் அதில் சுங்கத் திணைக் களத்தில் இடம்பெற்ற 323 கொள்கலன் விடுவிப்பு தொடர் பில் எதுவும் தெரிவிக்கவில்லை.

ஜனாதிபதி இதனை வேண் டுமென்றே மறைத்திருக்க வேண்டும். ஏனெனில் சுங்கம் ஜனாதிபதியின் நிதி அமைச்சின் கீழே இருக்கிறது.

அதனாலே சுங்க தொழிற் சங்கம் இது தொடர்பில் ஆரம்பமாக ஜனா திபதிக்கு கடிதம் அனுப்பி இருந்தது.

இதுதொடர்பாக விசா ரணை மேற்கொண்டால் இறு தியில் ஜனாதிபதியே இதற்கு பொறுப்பு கூறவேண்டி ஏற்படு கிறது. எனவேதான் ஜனாதிபதி ஊழல் மோசடி இடம்பெறும் அரச துறைகளை பெயரிடும் போது சுங்க திணைக்களத்தை தெரிவிக்காமல் வேண்டு மென்றே மறைத்துள்ளார்-என் றார். (அ)

# வீதிகள் நீரில் மூழ்கின!

கொழும்பு, ஜூன் 13

பொகவந்தலாவை பகுதியில் கனமழை பெய்து வரும் நிலையில், கெசல்க முவ ஓயாவில் நீர்மட்டம் அதிகரித்த காரணத்தினால் அப்பகுதியில் உள்ள பல வீதிகள் நீரில் மூழ்கியுள் ளன.

முக்கியமாக காசல்ரீ நீர்த்தேக்கத்துக்கு நீர் வழங் கும் கினை ஆறான கெசல் கமுவ ஓயாவின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது.

இதனால் அதனை அண்டிய பல தோட்டங் களின் பிரதான வீதிகள் நீரில் மூழ்கியுள்ளன. குறிப்பாக பொகவந்த லாவை நகரத்திலிருந்து கெரேசியா மற்றும் கிலானி தோட்டங்களுக்குச் செல்லும் வீதிகள் நீரில் மூழ்கியுள்ளன. இதனால் அந்த வீதிகளில் பயணிக்கும் பயணிகள் கடும் சிரமங் களை எதிர்கொண்டுள் ளனர். (அ)

# நாட்டில் சிக்குன்குனியா, டெங்கு ஒரே நேரத்தில் ஏற்படும் நிலை!

கொழும்பு, ஜூன் 13

சிக்குன்குனியா மற்றும் டெங்கு ஆகிய இரு நோய்க ளும் ஒரே நேரத்தில் ஏற்படும் நிலைமை காணப்படுவதாக, சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் மகேஷ்க ஜயவர்தன தெரிவித் துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணி யகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர், இது ஒரு ஆபத்தான நோய் அல்ல என்ற போதிலும், சிறுவர்கள் மற்றும் 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு நோய் நிலைமை ஏற்படுவதற்கான அதிக வாய்ப்புகள் உள்ளதாக வும் குறிப்பிட்டார்.

அத்துடன், காய்ச்சல் ஏற் பட்டுள்ள சிறுவர்களைப் பாட சாலைக்கு அனுப்புவதனை தவிர்க்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதேநேரம், 2 நாட்களுக்கு மேலாகக் காய்ச்சல் நிலைமை தொடருமாயின், உரிய வைத்தி யரை நாடுமாறும் சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் மகேஷ்க ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

அவ்வாறான சிறுவர்களைப் பாடசாலைகளுக்கு அனுப்பு வதன் ஊடாக, ஏனைய மாண வர்களுக்கும் நோய் நிலைமை பரவுவதற்கான சாத்தியம் நிலவுகிறது.

இன்புளுவென்சா போன்ற வைரஸ் விரைவாக சிறுவர்களி டத்தே பரவக் கூடிய சாத்தியம் நிலவுகிறது.

காய்ச்சலுடன் எலும்பு மூட் டுக்களில் அதிக வலி உணரப் படுவது குறிப்பாக சிக்குன்குனியா நோய்க்கான அறிகுறியாகும்.

எனினும் சிறுவர்களிடத்தே இவ்வாறான நோய் அறிகுறிகள் அவதானிக்கப்படுவதில்லை. எனவே,

நாட்பட்ட நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், சிறுவர் கள் மற்றும் 65 வயதுக்கு மேற் பட்டோர் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டும் என சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் மகேஷ்க ஜயவர்தன தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வெருகல் படுகொலையின் 39ஆவது நினைவேந்தல்

## நேற்று உணர்வுபூர்வமாக நினைவுகூரல்

திருகோணமலை, ஜூன் 13

**திருகோணமலை வெருகல் படுகொலையின் 39ஆவது நினைவேந்தல் நிகழ்வு வெருகல் - பூநகர் பகுதியில் நேற்று வியாழக்கிழமை மிகவும் உணர்வுபூர்வமான முறையில் நடைபெற்றது.**

வெருகல் - ஈச்சிலம்பற்று முகாம்களில் தஞ்சமடைந்திருந்த மக்களுக்கான உலர் உணவுப் பொதிகளை ஏற்றிவந்த அப்பாவி பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டு 39 வருடங்களாகியும் நீதி கிடைக்காத நிலையில் குறித்த நினைவேந்தலை பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள், சிவில் செயல்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இணைந்து ஏற்பாடு செய்தனர்.

நினைவேந்தல் நிகழ்வில் முதலில் ஆத்ம சாந்தி வேண்டி பூஜைகள் இடம்பெற்று பொதுச் சுடர் ஏற்றி வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து உயிரிழந்தவர்களின் உருவப் படங்களுக்கு விளக்கேற்றி மலர்தூவி ஆத்மா சாந்தி வேண்டி நினைவஞ்சலியும் செலுத்தப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தின் ஈச்சிலம்பற்று பகுதியில் அமைக்கப்பட்டிருந்த அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருந்த மக்களுக்கான உலர் உணவுப்பொருட்களை சேருவில பகுதியிலிருந்து ஈச்சிலம்பற்று நோக்கி எடுத்து வரும்போது மகிந்தபுர பகுதியில் வைத்து மூன்று அரச அதிகாரிகள் உட்பட 21பேர் படுகொலை செய்யப்பட்டனர். இந்த வெருகல் படுகொலையின் 39ஆவது நினைவுதினம் நேற்றாகும்.

அன்று நாட்டில் நிலவிய யுத்தசூழல் காரணமாக வெருகல் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மக்கள் ஈச்சிலம்பற்று, பூமரத்தடிச்சேனை மற்றும் மாவடிச்சேனை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருந்த அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருந் தனர். இவர்களுக்கான உலர் உணவுப் பொருட்களை அரசாங்கம் சேருவில பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாக வழங்கி வந்தது.

இந்த நிலையில் 1986ஆம் ஆண்டு யூன் மாதம் 12ஆம் திகதி அகதிகளுக்கான நிவாரணங்களை வண்டில்களை கொண்டுவந்து ஏற்றிச் செல்லு மாறு அப்போது மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த வர்ணசூரியவால் மக்களுக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் முகாம்களுக்கு பொறுப்பான அரச அதிகாரிகள் மூவர் உட்பட 21 பேர் மாட்டு வண்டில்களுடன் சேருவில நோக்கிச் சென்றனர்.

அங்கிருந்து நிவாரணப் பொருட்களை ஏற்றிக் கொண்டு ஈச்சிலம்பற்று நோக்கி வரும்போது மகிந்தபுரவில் வைத்து ஆயுதம் தாங்கிய நபர்களால் இவர்கள் வழிமறிக்கப்பட்டு பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர் தூரம் அழைத்துச் செல்லப்பட்டு முழங்காலில் இருக்க வைத்து பின்னர் வெட்டியும் துப்பாக்கியால் சுட்டும் படுகொலை செய்யப்பட்டனர்.

இதில் மூன்று அரச அதிகாரிகள் உட்பட 21பேர் படுகொலை செய்யப்பட்டதோடு மூன்று பேர் படுகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் உயிர் தப்பினர். (எ)

# நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கடமையேற்பு




நிந்தவூர், ஜூன் 13

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் நிலையத்தின் புதிய பொறுப்பதிகாரியாக எஸ். நிஷாந்த வெதகே நேற்று கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் 16 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது.

இதற்கமைய நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். நஜீம், பொலநறுவை பொலிஸ் நிலையத்துக்கும் பன்சியகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நிந்தவூர் பொலிஸ் நிலையத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டனர். (எ-01)



# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் புதிய மாணவர் இணைப்பு நிகழ்வு

ஒலுவில், ஜூன் 13

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக முகாமைத்துவ வர்த்தக பீடத்துக்கு 2023 - 2024 கல்வியாண்டின் புதிய மாணவர்களை இணைத்துக்கொள்ளும் ஆரம்ப நிகழ்வு நேற்று முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் பீடாதிபதி எம். முஸ்தபா நெறிப்படுத்தலில் ஏ. ஆர். மன்சூர் ஞாபகார்த்த பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. (எ)




# விழிப்புணர்வு நடைபவனி

சாய்ந்தமருது, ஜூன் 13

சர்வதேச சிறுவர் தொழிலாளர்களுக்கு எதிரான தின நிகழ்வு நாடளாவிய ரீதியில் நேற்று முன்னெடுக்கப்பட்டது. இதனை முன்னிட்டு சாய்ந்தமருது லீடர் எம். எச். எம். அஷ்ரப் வித்தியாலய அதிபர் எம். ஐ. சம்சுதீன் ஏற்பாட்டில் விழிப்புணர்வு நடைபவனி நடைபெற்றது. (எ-06)

# கந்தளாயில் நேருக்கு நேர் மோதி மோட்டார் சைக்கிள்கள் விபத்து

## முதியவர் படுகாயம்

திருகோணமலை, ஜூன் 13

கந்தளாயில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேராறு பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற மோசமான இந்த வீதி விபத்தில் ஒருவர் பலத்த காயமடைந்துள்ளார்.

காயமடைந்த நபர் கந்தளாய் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் பாதிக்கப்பட்டவர் கந்தளாய் முதலாம் குடியிருப்பை சேர்ந்த 60 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் முதலாம் கொலனி பகுதியிலிருந்து மோட்டார் சைக்கிள் திருத்தும் நிலையத்துக்குத் திரும்ப முற்பட்டபோது, எதிரே வேகமாக வந்த இளைஞரின் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் போக்குவரத்து பொலிஸார் இல்லாத காரணத்தால், அண்மைக்காலமாக விபத்துக்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் இவ் வீதியில் போக்குவரத்து ஒழுங்கமைப்பை மேம்படுத்த உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், பாடசாலை மாணவர்களும் சிறுவர்களும் வீதியில் பயணிக்க அச்சப்படுவதாக பெற்றோர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# மண்முனைப்பற்று பிரதேச சபையின் தவிசாளராக மாணிக்கராஜா தெரிவு

மட்டக்களப்பு, ஜூன் 13

மட்டக்களப்பு, மண்முனைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் பிரதித் தவிசாளர் தெரிவு நேற்று முன்தினம் புதன்கிழமை சபை மண்டபத்தில் நடைபெற்றது.

10 வட்டாரங்களில் 6 வட்டாரங்களை மட்டுமே இலங்கை தமிழ் அரசுக் கட்சி கைப்பற்றியிருந்த நிலையில், பெரும்பான்மை இல்லாததால் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல். எம். அஸ்மி தலைமையில் நடைபெற்ற வாக்கெடுப்பில், தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த எஸ். மாணிக்கராஜா தவிசாளராகவும் கே. செந்தில்குமார் பிரதித் தவிசாளராகவும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

மண்முனைப்பற்று பிரதேச சபை தற்போது 10 நேரடி தெரிவு உறுப்பினர்களும் 7 பட்டியல் உறுப்பினர்களும் இணைந்து 17 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

தவிசாளர் தெரிவு நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், ஏ. எம். ஹிஸ்புல்லாஹ் மற்றும் ஞா. சிறிநேசன் உள்ளிட்ட கட்சிகளின் ஆதரவாளர்களும் பங்கேற்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அமெரிக்காவில் அவசர நிலை இரவு நேர ஊரடங்கு உத்தரவு!

## பற்றி எரியும் லொஸ் ஏஞ்சல்ஸ் நகர்

வாஷிங்டன், ஜூன் 13

**அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் இடம் பெற்று வரும் போராட்டங்கள் மற்ற நகரங்களுக்கும் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் அங்கு அவசர நிலை பிரகடனப் படுத்தப்பட்டு இரவு நேர ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் குடியேற்றம் தொடர்பான கடும் நடவடிக்கைகளுக்கு எதிராக கலிபோர்னியா மாகாணம் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் இடம்பெற்ற போராட்டத்தில் கலவரம் வெடித்துள்ளது. பொலிஸ் வாகனங்கள் உட்பட பல வாகனங்களுக்குத் தீ வைக்கப்பட்டன. வணிக வளாகங்கள், கடைகள் சூறையாடப்பட்டன. கலவரத்தை ஒடுக்க தேசிய பொலிஸ் படையினர் மற்றும் கடற்படையினரை ட்ரம்ப் களமிறக்கியுள்ளார். இருந்த போதிலும் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் போராட்டங்கள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்து வருகிறது.

பல இடங்களில் தேசிய படையினர் - போராட்டக்காரர்கள் இடையே மோதல் ஏற்பட்டது. இதனால், லொஸ் ஏஞ்சல்ஸில் நேற்று 5ஆவது நாளாக நீடித்த போராட்டங்களால் பதற்றம் நிலவி வருகிறது. இதற்கிடையே போராட்டங்களுக்கு மத்தியில் கடைகளுக்குள் புகுந்து பொருட்களைத் திருடிச் செல்லும் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. முகமுடி அணிந்த சிலர் வணிக வளாகங்களுக்குள் புகுந்து விலை உயர்ந்த தொலைபேசிகள் உள்ளிட்ட இலத்திரனியல் பொருட்களைத் தூக்கிக் கொண்டு சென்றனர். இதேபோன்று, மற்ற கடைகளையும் பொருட்களை சேதப்படுத்தி திருடிச் சென்றனர். இந்த நிலையில், லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் இரவு நேர ஊரடங்கு உத்தரவை முதல்வர் கரேன் பாஸ் பிறப்பித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறும்போது, நாச வேலையைத் தடுக்கவும் கொள்ளை அடிக்கப்படுவதைத் தடுக்கவும் அவசர நிலையை அறிவித்து, லொஸ் ஏஞ்சல்ஸ் நகர மையத்தில் ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்துள்ளேன். போராட்டங்கள் இடம்பெற்ற பகுதியை உள்ளடக்கிய நகர மையப்பகுதியில் ஊரடங்கு உத்தரவு அமுலில் இருக்கும்- என்றார். இந்த நிலையில், லொஸ் ஏஞ்சல்ஸில் இடம்பெற்று வரும் போராட்டங்கள் மற்ற நகரங்களுக்கும் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. நியூயோர்க், சிகாகோ, டல்லாஸ், அட்லாண்டாவில் போராட்டங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளனர். (எ)

# பழனிச்சாமி தலைமையில் தமிழகத்தில் கூட்டணி ஆட்சி

திருநெல்வேலி, ஜூன் 13

தமிழகத்தில் 2026 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றிபெற்று, எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் கூட்டணி ஆட்சி அமைக்கப்படும் என்று தமிழக பா. ஜ. க. தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

திருநெல்வேலியில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் கூறுகையில், "எங்கள் கூட்டணியில் மேலும் பல கட்சிகள் இணைய வாய்ப்புள்ளது. அதற்கான பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தேர்தலுக்கு இன்னும் நாட்கள் இருப்பதால் அது குறித்து பின்னர் தெரியவரும்.

தமிழகத்தில் வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் பா.ஜ.க. கூட்டணி வெற்றிபெற்று, அ. தி. மு. க. பொதுச் செயலாளர் பழனிச்சாமி தலைமையில் கூட்டணி கட்சி ஆட்சி அமையும். மக்கள் வாக்களித்த பின்னர் தான் எது வலிமையான கூட்டணி என்பது தெரியவரும். தாங்கள்தான் வலிமையான கட்சி என்று கூறிக் கொள்ளும் தி.மு.க., தேர்தலில் தனித்து நிற்கத் தயாரா? தி.மு.க. கூட்டணிக்குள் ஏற்படும் சலசலப்பு போகப் போக வெளியாகும்"- என்றார். (எ)

# எலான் மஸ்க் மீது இனி நான் குறை சொல்லப்போவதில்லை

## டொனால்ட் ட்ரம்ப் தெரிவிப்பு

வாஷிங்டன், ஜூன் 13

"எலான் மஸ்க் வருத்தம் தெரிவித்திருப்பது நன்று. அவர் மீது நான் எந்தக் குறையும் சொல்லப் போவதில்லை. ஆனால், நான் சற்று ஏமாற்றமடைந்தேன்"என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் தெரிவித்துள்ளார். சரியாக ஒரு வார காலத்துக்கு முன் பரஸ்பரம் கடும் விமர்சனங்களை வெளியிட்ட ட்ரம்ப் - மஸ்க் தற்போது ஆவேசம் தனிந்த கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், திடீர் திருப்பமாக எலான் மஸ்க், எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பற்றி கொஞ்சம் அதிகமாக விமர்சித்துவிட்டேன். அதற்காக வருந்துகிறேன்" எனத் தெரிவித்தார். இதனை ஏற்றுக் கொள்வது போல், "எலான் மஸ்க் வருத்தம் தெரிவித்திருப்பது நன்று. அவர் மீது நான் எந்தக் குறையும் சொல்லப்போவதில்லை. ஆனால், நான் சற்று ஏமாற்றமடைந்தேன்"-என ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார். (எ)

# பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணி நீடிப்பது கேள்விக்குறியே

திருநெல்வேலி, ஜூன் 13

தமிழக எதிர்க்கட்சித் தலைவர் பழனிச்சாமி சுயமாக சிந்திக்கக் கூடியவர். பா. ஜ. கவுடன் தற்போது கூட்டணி சேர்ந்துள்ள அவர், கடைசி வரை அவர்களுடன் இருப்பாரா? என்பது கேள்விக்குறி என்று சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு தெரிவித்தார்.

நேற்று பாளையங்கோட்டையில் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கும் முறையை, வங்கிகளுடன் இணைக்கும் திட்டத் தொடக்க விழாவில் பங்கேற்ற அவர், பின்னர் செய்தியாளர்களிடம் கூறுகையில்,

மத்திய அரசால் பாதிக்கப்பட்ட மாநிலமாக தமிழகம் உள்ளது. 10 இலட்சம் கோடி ரூபாய் தந்தோம், 20 இலட்சம் கோடி ரூபாய் தந்தோம் என்று மத்திய அரசு சொல்கிறதே தவிர, எந்தத் திட்டத்துக்கு, எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது என்று சொல்லவில்லை. தமிழக அரசை மத்திய அரசு தொடர்ந்து வஞ்சித்து வருகிறது- என்றார். (எ)

# சிறுவர்கள் சமூக வலைத்தளம் பயன்படுத்த விரைவில் தடை!

பாரிஸ், ஜூன் 13

பிரான்ஸில் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள், சிறுமிகள் சமூக வலைத்தளத்தில் கணக்கு தொடங்கி பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்படுமென ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் அறிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் கூறுகையில், "பிரான்ஸில் தொலைபேசியில் சமூக வலைத்தளம் பயன்படுத்தும் சிறுவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இதனால் சிறுவர்கள் தவறான பாதையில் செல்கிறார்கள். மேலும், சிறுவர்கள் வன்முறை செயல்களிலும் ஈடுபடுகின்றனர். சிறுவர்கள் நமது நாட்டின் மனித வளமாக இருக்கும் நிலையில் சமூக வலைத்தளம் மூலமாக அவர்கள் கெட்டு சீரழிவது கண்கூடாகத் தெரிகிறது. இந்த நிலையில் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சமூக வலைத்தளம் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்காகத் தடை விதிக்கக்கோரி ஐரோப்ப ஒன்றியத்திடம் முறைப்பாடு செய்துள்ளேன். அவர்கள் ஒப்புதல் அளிக்கவில்லை எனில் ஒரு சில மாதங்களில் பிரான்ஸில் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சமூக வலைத்தளம் பயன்படுத்துவதற்கு நிரந்தரத் தடை விதிக்கப்படும்"- என்றார். (எ)

# இறுக்கமான ஆடை அணிய பெண்களுக்கு கட்டுப்பாடு

டமாஸ்கஸ், ஜூன் 13

பொது இடங்களில் பெண்கள் தளர்வான ஆடைகளை அணிய வேண்டும். கடற்கரைகள் மற்றும் நீச்சல் குளங்களுக்குச் செல்லும்போது பர்தா அல்லது முழு உடலையும் மறைக்கும் நீச்சலுடைகளை அணிய வேண்டும் என்று சிரியாவின் புதிய இஸ்லாமிய அரசு உத்தரவிட்டுள்ளது.

சிரியாவில் ஆட்சியிலிருந்த பஷார் அல் ஆஷாத் தலைமையிலான அரசு கடந்த ஆண்டு முடிவுக்கு வந்தது. இதை அடுத்து அஹமது அல் ஷரா தலைமையிலான இடைக்கால இஸ்லாமிய அரசு கடந்த டிசெம்பரில் ஆட்சிப் பொறுப்பேற்றது.

இடைக்கால அரசு ஆட்சிக்கு வந்து 6 மாதங்களான நிலையில், தற்போது ஆடைக்கட்டுப்பாடுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில், ஜனாதிபதி அஹமது அல் ஷரா ஒப்புதலுடன் சுற்றுலா அமைச்சு வெளியிட்டுள்ள உத்தரவில், "கடற்கரைகளுக்குச் செல்லும் பெண்கள் பர்தா அல்லது உடலை மறைக்கும் பிற கண்ணியமான ஆடைகளை அணிய வேண்டும். பொதுமக்களின் நலன் கருதி இந்த உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

நீச்சல் குளங்கள் தவிர்ந்த பொது இடங்களில், பெண்கள் தளர்வான ஆடைகளை அணிய வேண்டும். தோள்கள் மற்றும் முழங்கால்களை மறைக்கும்படியான ஆடைகளை அணிய வேண்டும். இறுக்கமான ஆடைகளைத் தவிர்க்க வேண்டும். பொது இடங்களில் ஆண்கள் மேலாடையின்றி இருக்க அனுமதி யில்லை- என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (எ)

# அமெரிக்கா - சீனா இடையே வர்த்தக ஒப்பந்தம் உறுதி



வாஷிங்டன், ஜூன் 13

அமெரிக்கா - சீனா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் உறுதி செய்யப்பட்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

லண்டனில் இரு நாட்டு உயர் அதிகாரிகளுக்கும் இடையே இரண்டு நாட்கள் நடைபெற்ற பேச்சுகளுக்குப் பிறகு சீனாவுடனான ஒப்பந்தம் உறுதி செய்யப்பட்டதாக ட்ரம்ப் கூறியுள்ளார்.

இதன்படி, ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, சீனா அமெரிக்காவுக்கு காந்தங்கள், அரிதான பூமித் தனிமங்களை வழங்கும் என்றும் சீன மாணவர்களுக்கான விசாக்களை அமெரிக்கா அனுமதிக்கும் என்றும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கடந்தாண்டில், இரு நாடுகளுக்கும் இடையே 58,200 கோடி டொலர் மதிப்பில் வர்த்தகம் நடைபெற்ற நிலையில், வரிப் போரால் நடப்பாண்டு வர்த்தகம் வெகுவாக சரிந்தது குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரபாடா அபார பந்துவீச்சு

# முதல் இன்னிங்ஸில் ஆஸி அணி 213 ஓட்டங்களுக்குள் சுருண்டது


லோர்ட்ஸ், ஜுன் 13

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டியில் முதல் இன்னிங்ஸில் அவுஸ்திரேலிய அணி 212 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

அவுஸ்திரேலியா- தென்னாபிரிக்கா இடையிலான 3ஆவது உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டி லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நேற்று முன்தினம் தொடங்கியது. இந்த ஆட்டத்துக்கான நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது. தொடர்ந்து அவுஸ்திரேலியாவின் தொடக்க வீரர்களாக லபுஸ்சேன் மற்றும் கவாஜா களம் கண்டனர்.

இதில் கவாஜா ஓட்டம் எடுக்காமலும் லபுஸ்சேன் 17 ஓட்டங்களிலும், அடுத்து வந்த கமரூன் கிரீன் 4 ஓட்டங்களிலும், டிராவிஸ் ஹெட் 11 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்து அதிர்ச்சி கொடுத்தனர். தொடர்ந்து ஸ்டீவ் ஸ்மித் மற்றும் பியூ வெப்ஸ்டர் ஜோடி சேர்ந்தனர். இருவரும் நிதானமாக விளையாடி ஓட்டங்கள் சேர்த்தனர். இதன் காரணமாக இருவரும் அரைச்சதம் அடித்து அசத்தினர்.

இதில் ஸ்மித் 66 ஓட்டங்கள் எடுத்த நிலையிலும் பியூ வெப்ஸ்டர் 72 ஓட்டங்கள் எடுத்த நிலையிலும் ஆட்டமிழந்தனர். தொடர்ந்து களம் கண்ட அலெக்ஸ் ஹெரி 23 ஓட்டங்களிலும் பட் கம்மின்ஸ் ஓர் ஓட்டத்திலும் வெளியேறினர்.




இறுதியில் அவுஸ்திரேலிய அணி தனது முதல் இன்னிங்ஸில் 56. 4 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 212 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. தென்னாபிரிக்கா தரப்பில் ரபாடா 5 விக்கெட்கள் வீழ்த்தினார். இந்த நிலையில் தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய தென்னாபிரிக்க அணி 43 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களை இழந்து துடுப்பெடுத்தாடி வருகிறது. (எ)

## ரி-20 தரவரிசை: முதலிடத்தை நெருங்குகிறார் ஆதில் ரஷித்


டுபாய், ஜுன் 13

பந்துவீச்சாளர்கள் தரவரிசைப் பட்டியலில் இங்கிலாந்தின் ஆதில் ரஷித் 2 இடங்கள் முன்னேறி இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளார்.

இங்கிலாந்து - மேற்கு இந்திய தீவுகள் அணிகளுக்கு இடையிலான ரி - 20 தொடர் நடைபெற்று முடிந்துள்ள நிலையில், சர்வதேச ரி - 20 வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலை ஐ. சி. சி நேற்று வெளியிட்டுள்ளது. இதில், துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் அவுஸ்திரேலிய அணியின் டிராவிஸ் ஹெட் முதலிடத்திலும் இந்திய வீரர் அபிஷேக் சர்மா இரண்டாம் இடத்திலும் நீடிக்கும் நிலையில் மற்றொரு இந்திய வீரர் திலக் வர்மா ஓர் இடம் முன்னேறி மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளார்.

இங்கிலாந்து - மேற்கு இந்திய தீவுகள் இடையிலான ரி - 20 தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜோஸ் பட்லர் ஓர் இடம் முன்னேறி 5ஆம் இடத்தை பிடித்துள்ளார். பந்துவீச்சாளர்கள் தரவரிசைப் பட்டியலைப் பொறுத்தமட்டில் நியூசிலாந்தின் ஜேக்கப் டபி முதலிடத்தில் நீடிக்கும் நிலையில், இங்கிலாந்தின் ஆதில் ரஷித் 2 இடங்கள் முன்னேறி இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளார்.

இந்தப் பட்டியலில் இந்திய அணியைச் சேர்ந்த வருண் சக்கரவர்த்தி 3ஆம் இடத்திலும் ரவி பிஷ்னோய் 7ஆம் இடத்திலும் அர்ஷ்தீப் சிங் 10ஆம் இடத்திலும் நீடித்து வருகின்றனர். சகல துறை வீரர்களுக்கான தரவரிசையில் இந்திய வீரர் ஹர்த்திக் பாண்டியா முதலிடத்தில் நீடிக்கிறார். (எ)






உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்

## கிண்ணம் வெல்லும் அணிக்கு 107 கோடி ரூபா வழங்கப்படும்

லோர்ட்ஸ், ஜுன் 13

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டி நடைபெற்று வரும் நிலையில் கிண்ணம் வெல்லும் அணிக்கு 107 கோடி ரூபாய் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

டெஸ்ட் கிரிக்கெட்டை வளர்க்கும் நோக்கில் சர்வதேச கிரிக்கெட் பேரவை கடந்த 2019ஆம் ஆண்டு உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் என்ற ஐ. சி. சி. தொடரை உருவாக்கியது. இதன் முதலாவது சீசனில் நியூசிலாந்து அணியும் 2ஆவது சீசனில் அவுஸ்திரேலிய அணியும் கிண்ணத்தை கைப்பற்றின.

இதனையடுத்து தற்போது நடைபெற்று வரும் 3ஆவது உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் நடப்பு சம்பியன் அவுஸ்திரேலியா- தென்னாபிரிக்கா அணிகள் மோதுகின்றன.

இந்த நிலையில், டெஸ்ட் சம்பியன்ஷிப் கிண்ணத்தை வெல்லும் அணி மற்றும் 2ஆம் இடம் பிடிக்கும் அணிக்கான பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, சம்பியனாகும் அணிக்கு இலங்கை மதிப்பில் 107. 40 கோடி ரூபாயும் 2ஆவது இடத்தைப் பிடிக்கும் அணிக்கு 64. 62 கோடி ரூபாயும் பரிசுத் தொகையாக வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## ஆர்ஜென்ரீனா அணியிடம் இந்தியா போராடி தோல்வி

ஆம்ஸ்டர்டாம், ஜுன் 13

புரோ ஹொக்கி லீக் தொடரில் ஆர்ஜென்ரீனா அணியிடம் இந்தியா போராடி தோல்வியடைந்தது.

9 அணிகள் இடையிலான 6ஆவது புரோ ஹொக்கி லீக் போட்டியின் ஐரோப்பிய சுற்று நெதர்லாந்து தலைநகர் ஆம்ஸ்டர்டாமில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் இந்திய அணி, ஆர்ஜென்ரீனாவை சந்தித்தது. மிகவும் பரபரப்பான இந்த ஆட்டத்தில் இந்திய அணி 4 - 3 என்ற கோல் கணக்கில் போராடி தோற்றது.

ஐரோப்பிய சுற்றில் இந்திய அணி தொடர்ச்சியாக சந்தித்த 3ஆவது தோல்வி இதுவாகும். முன்னதாக நெதர்லாந்துக்கு எதிரான இரு ஆட்டங்களில் இந்தியா தோல்வியடைந்தது. (எ)

## ஆஸிக்கு எதிரான டெஸ்ட் தொடர் மே. இ. தீவுகள் அணி அறிவிப்பு

கயானா, ஜுன் 13

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்கேற்கும் மேற்கு இந்திய தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு இந்திய தீவுகள் கிரிக்கெட் அணி சமீபத்தில் இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடியது. இந்தத் தொடரை முடித்துக் கொண்டு மேற்கு இந்திய தீவுகள் அணி அயர்லாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடவுள்ளது. இந்தத் தொடர் இன்று தொடங்குகிறது.

அயர்லாந்துக்கு எதிரான ரி - 20 தொடர் நிறைவடைந்ததும் மேற்கு இந்திய தீவுகள் அணி சொந்த மண்ணில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இந்த நிலையில், இந்தத் தொடருக்கான மேற்கு இந்திய தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அணிக்கு ரோஸ்டன் சேஸ் தலைவராகவும் ஜோமல் வாரிக்கன் துணைத் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், இந்த அணியில் ஷாய் ஹோப், பிரண்டன் கிங் ஆகியோர் இடம் பிடித்துள்ளனர்.

மேற்கு இந்திய தீவுகள் அணி விவரம் வருமாறு, ரோஸ்டன் சேஸ், ஜோமல் வாரிக்கன், கெவ்லான் ஆண்டர்சன், கிரெய்க் பிராத்வைட், ஜான் கேம்பல், கீசி கார்டி, ஜஸ்டின் கிரீவ்ஸ், ஷாய் ஹோப், டெவின் இம்லாச், அல்சாரி ஜோசப், ஷமர் ஜோசப், பிராண்டன் கிங், ஜோஹறன் லேன், மிகைல் லூயிஸ், ஆண்டர்சன் பிலிப், ஜெய்டன் சீல்ஸ் ஆகியோர் இடம்பிடித்துள்ளனர். (எ)

# இந்தியாவை எதிர்கொள்ள இங்கிலாந்து அணி தயார்

லண்டன், ஜுன் 13

இந்தியாவை எதிர்த்து விளையாட தயாராகவுள்ளோம் என்று இங்கிலாந்து வீரர் ஆலி போப் கூறியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி இந்த மாதம் இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இதில் இந்தியா - இங்கிலாந்து அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 20ஆம் திகதி லீட்சில் தொடங்குகிறது. இந்தத் தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டு விட்டது.

டெஸ்ட் போட்டியிலிருந்து ரோஹித் சர்மா ஓய்வு பெற்றதால் அடுத்த அணித் தலைவர் யார்? என்று அதிக எதிர்பார்ப்பு நிலவியது. இந்த நிலையில் சுப்மன் கில் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாட உற்சாகத்துடன் தயாராக இருப்பதாக இங்கிலாந்தின் ஆலி போப் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறியதாவது, இது இளமையான அணி ஆனால் இந்த இந்திய வீரர்கள் நிறைய அனுபவம் திறமை இருக்கிறது. அவர்கள் நல்ல இளம் வீரர்களுடன் இங்கே வந்திருக்கிறார்கள்.

அதற்கு எங்களுடைய வீரர்களும் தயாராக இருக்கிறார்கள். இந்தியாவுக்கு எதிராக விளையாடுவது எங்களுக்கு சிறந்த நேரமாகும்.

எனவே, நாங்கள் அதிகமாக எதையும் பார்க்காமல் சிறப்பாக விளையாடுவதில் கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் அடுத்ததாக ஆஷஸ் தொடர் வருகிறது. இதற்கு முன்பாக இத்தொடரில் விளையாட நாங்கள் உற்சாகத்துடன் காத்திருக்கிறோம்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லைமீறும்...

செயலாளர் என். எம். ஆலம் தெரிவித்துள்ளார்.

மன்னாரிலுள்ள இணையத்தின் பணி மனையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனை அவர் கூறினார்.

மேலும், "கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகரை நேற்று (நேற்று முன் தினம்) மீனவர் பிரதிநிதிகளின் சங்கங்கள் இணைந்து சந்தித்தோம். இதன் போது, எதிர்வரும் 15ஆம் திகதி தமிழக மீனவர்களின் மீன்பிடி தடைக்காலம் நிறைவுறுகிறது. இதனால், அவர்களின் எல்லை தாண்டிய வருகை, அது தொடர்பில் அரசாங்கம் முன்னெடுக்க வேண்டிய விடயங்கள் மற்றும் மீனவர்களான நாம் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பில் அமைச்சருடன் பேசினோம்.

"இதன்போது அமைச்சர், இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய வருகையை தடுப்பதில் அரசாங்கமும் கடற்றொழில் அமைச்சும் தீவிரமாக இருக்கிறது. கடற்படையும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குகிறது. எனவே, எதிர்காலத்தில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்போம். எதிர்வரும் 15ஆம் திகதியிலிருந்து இலங்கை கடல் எல்லையில் கடற்படை தீவிர கண்காணிப்பில் ஈடுபடும். அத்து மீறி வருகின்ற இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவர். அவர்களின் படகுகளும் கைப்பற்றப்படும். வட பகுதி மீனவர்கள் அச்சம் கொள்ள தேவையில்லை. அரசாங்கம் தனது செயல்பாட்டில் உறுதியாக இருக்கிறது என்று உறுதியளித்தார்" - என்றும் ஆலம் தெரிவித்தார். (ஐ)

## தெல்லிப்பழை...

இணையுமாறும் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

அறிக்கை ஒன்றின் மூலம் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இந்த அழைப்பை விடுத்துள்ளது. "எங்கள் மருத்துவமனையை மீட்டெடுப்போம் - புற்றுநோய் பிரிவை காப்பாற்றுவோம்" என்ற தொனிப்பொருளில் முன்னெடுக்கப்படும் போராட்டம் குறித்து வெளியிடப்பட்ட அறிக்கையின் முக்கிய அம்சங்கள் வருமாறு,

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை கடந்த இரண்டு ஆண்டுகளாக வினைத்திறனற்ற நிர்வாகியின் செயல்பாடுகளால் பல்வேறு நிர்வாக சிக்கல்களை சந்தித்து வருகிறது. மருத்துவமனை ஊழியர்களை பாதுகாப்பற்ற நிலைக்கும் நிர்வாகம் இட்டுச் செல்கிறது. இது தொடர்பில் மாகாண, மத்திய சுகாதார உயர் மட்டங்களுக்குத் தெரியப்படுத்தியும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இது தொடர்பில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டோம்.

மருத்துவமனையின் புற்றுநோய் பிரிவில் சேவையாற்றும் மருத்துவ நிபுணர் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதில் தொடர்ச்சியாக நிர்வாக ரீதியான முட்டுக்கட்டைகளை எதிர் கொண்டு வருகிறார். மருத்துவ மனையில் நிலவும் பிரச்னைகள் தொடர்பில் உண்மை நிலைகளை தெரிவித்து விழிப்புணர்வூட்டும் செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த நிலையில், மருத்துவமனை நிர்வாகி தேவநேசனுக்கு எதிராக முன் வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு எதிராக உடனடியாக விசாரணை குழுவை நியமிக்கவேண்டும், புற்று நோயாளர்களுக்கு தரமான - இலவச சிகிச்சை அளிப்பதில் செயற்கையாக ஏற்படுத்தப்பட்ட முட்டுக்கட்டைகளை நீக்கவேண்டும், மருத்துவ நிபுணர்கள் - மருத்துவர்கள் மற்றும் இதர சுகாதார ஊழியர்கள் அனைவரும் பாதுகாப்பான சூழ்நிலையில் சேவையாற்ற ஏதுவான நிர்வாக மாற்றத்தை வெகுவிரைவில் ஏற்படுத்த வலியுறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மாணவருக்கு...

24 வயது இளைஞர்களாவர். இவர்கள் கைது செய்யப்பட்ட போது அவர்களிடமிருந்து 200 போதை மாத்திரைகள் கைப்பற்றப் பட்டன. அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளை தொடர்ந்து அவர்கள் மறைத்து வைத்திருந்த 200 போதை மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், இந்தப் போதை மாத்திரைகளை அவர்கள் பாடசாலை மாணவர்களுக்கு விற்பனை செய்து வந்துள்ளனர் என்றும் விசாரணைகளில் தெரிய வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## தென்னிலங்கை...

பொதுச் செயலாளர் லசந்த அழகிய வண்ண ஆகியோர் நேற்றைய தினம் கூட்டாக நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்தத் தகவல் வெளியிடப் பட்டது.

மேலும், அக்குரணை, கடுகண்ணாவை, குளியாப்பிட்டி, உடுபத்தாவ பிரதேச சபைகளில் ஏற்கனவே தாம் ஆட்சியை அமைத்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மேலும், "நாங்கள் இன்னும் அதிகமான உள்ளூராட்சி அமைப்புகளின் ஆட்சியை பெறுவோம்," என்று திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.

"உள்ளூராட்சி அமைப்புகள் மூலம் மக்களுக்கு தரமான சேவையை உறுதி செய்வதில் கட்சிகளின் கூட்டு முயற்சி விரிவுபடுத்தப்படும்", என்று அழகிய வண்ண கூறினார்.

"அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் வழங்கியுள்ள ஆணையை பலப்படுத்த வேண்டிய பொறுப்பு எதிர்க்கட்சிகளுக்கு இருப்பதால் கொள்கை அடிப்படையில் ஒன்றிணைந்துள்ளோம். அரசாங்கத்துக்கு எதிரான சகல சக்திகளையும் ஒன்றிணைப்போம். இது நீண்டதூர பயணத்துக்கான ஆரம்பமல்ல", என்று சாகர காரியவசம் தெரிவித்தார். (ஐ)

## யாழ்.மாநகர...

போட்டியிட்ட கட்சிகள் எவையும் தேவையான அறுதிப் பெரும்பான்மையை பெற்றிருக்கவில்லை.

இலங்கை தமிழ் அரசு கட்சி 13, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 12, தேசிய மக்கள் சக்தி 10, ஈழ மக்கள் ஜனநாயக கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி ஆகியவை தலா 4, ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசிய கட்சி, ஆகியன தலா ஓர் ஆசனத்தையும் பெற்றிருந்தன.

இந்த நிலையில், இலங்கை தமிழ் அரசு கட்சியின் சார்பில் முதல்வராக விவேகானந்தராஜா மதிவதனி, பிரதி முதல்வராக இம்மானுவல் தயாளன் ஆகியோர் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று, அகில இலங்கை தமிழ் அரசு கட்சியும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியும் கூட்டாக செயல்பட இணக்கம் எட்டியுள்ளன. இதன் படி, அந்த கூட்டணியின் சார்பில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் கனகையா சிறீ கிருஷ்ணா முதல்வர் பதவிக்கும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் துரைராஜா ஈசன் பிரதி முதல்வர் பதவிக்கும் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியின் சார்பில் முதல்வர் பதவிக்கு சுந்தரமூர்த்தி கபிலன் போட்டியிடுவார் என்று அந்தக் கட்சியின் யாழ். மாவட்ட நிறைவேற்று குழு உறுப்பினரும் அமைச்சருமான இ. சந்திர சேகர் அறிவித்துள்ளார்.

இதேவேளை, ஈழமக்கள் ஜனநாயக கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசிய கட்சி ஆகியன இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்கு ஆதரவு அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், இந்தக் கட்சிகள் தமது உத்தியோகபூர்வ முடிவை அறிவிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பலாலி பொலிஸார்...

முன்வைத்தனர். வழக்கின் பின்னர் அவர்கள் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில்,

"தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டம் நடைபெறவிருந்தவேளை சிலரின் பெயரில் அவர்களுக்கு எதிராக நீதிமன்றில் தடை உத்தரவுகள் பெறப் பட்டன. பெறப்பட்ட தடை உத்தரவுகளை சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்காது போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை அங்கு வந்த பொலிஸார் அவர்களின் பெயர் விவரங்களை வாசித்து சென்றிருந்தனர். அதனூடாக சட்டத்தின் ஏற்பாடுகளை திருப் திப்படுத்தியுள்ளதாக பொலிஸ் தரப்பு கூற முடியாது என மன்றில் தெரிவித்திருந்தோம்.

இதேவேளை, தையிட்டி விகாரைக்கு பொறுப்பான "அமரபுர நிக்காய பீடம்" விகாரையில் பொசன் நிகழ்வுகளை நடத்துவது இல்லை என கடந்த மே மாதம் 29ஆம் திகதியே பதில் பொலிஸ் மா அதிபர், வட மாகாண மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோருக்கு அறிவித்துள்ளது.

இந்த நிலையில், கடந்த மாதம் பூரணை தின வழிபாட்டுக்கு வருகை தந்த பௌத்தர்களை போராட்டக்காரர்கள் இடைமறித்தனர் என்றும் தமிழர்கள் விகாரையை இடித்து அழிக்க போகிறார்கள் - பௌத்தர்கள் ஒன்றிணைந்து தையிட்டிக்கு செல்லவேண்டும் எனவும் சமூக வலைத்தளங்களில் கடும் போக்கு சிங்கள இனவாதிகள் பொய்யான தகவல்களை பரப்பி இனங்களுக்கு இடையில் முரண்பாடுகளை தோற்றுவிக்க முயன்றனர். அவர்கள் தொடர்பில் பொலிஸார் எந்த விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்ற விடயத்தை மன்றில் சுட்டிக்காட்டி, அதற்கான ஆதாரங்களையும் மன்றில் சமர்ப்பித்துள்ளோம்.

பலாலி பொலிஸ் அதிகாரிகள் பொய்யான தகவல்களை வழங்கி மன்றை தவறாக வழி நடத்துகின்றனர் என்ற விடயத்தையும் மன்றில் சுட்டிக்காட்டினோம். இதையடுத்து, அந்த வழக்கை நீதிவான் கிடப்பில் போட்டுள்ளார் - என்றனர். (ஐ)

## கற்கோவளம்..

மேய்ப்பதற்கு சென்ற ஒருவர் மண்டையோட்டை அவதானித்து அது குறித்து அந்தப் பகுதியின் கிராம சேவகருக்கு அறிவித்துள்ளார். கிராம சேவகர் பருத்தித்துறை பொலிஸாருக்கு அளித்த தகவலின்பேரில் அங்கு வந்த பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை நடத்தியதுடன், அடுத்த கட்ட நடவடிக்கைகளையும் முன்னெடுத்தனர்.

இதைத் தொடர்ந்து, பருத்தித்துறை நீதிவான் பொன்னுத்துரை கிரிசாந், சட்ட மருத்துவ அதிகாரி பகீரதன் ஆகியோர் சம்பவ இடத்தை நேரில் சென்று பார்வையிட்டனர். நீதிவானின் உத்தரவின்பேரில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் யாழ். போதனா மருத்துவ மனைக்கு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டன.


இந்த மனித எலும்பு எச்சங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, அதன் அறிக்கை எதிர்வரும் செவ்வாய்க் கிழமை நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப் படும் என்றும் தெரிய வருகிறது. (ஐ)

## 205 பேரின் உடல்கள்...



மேலும் அதிகரிக்கக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இறந்தவர்களில் ஒருவர் குஜராத் மாநிலத்தின் முன்னாள் முதல்வர் விஜய் ரூபானி (வயது 69) என்பதை இந்திய மத்திய அமைச்சர் சி. ஆர். பாட்டீல் உறுதிப்படுத்தினார். அவர் லண்டனிலுள்ள தனது குடும்பத்தவர்களை காணச் சென்றிருந்தார் என்று கூறப்படுகிறது.



இந்தியாவின் குஜராத் மாநிலத் தின் அகமதாபாத் விமான நிலையத்திலிருந்து எயர் இந்தியா நிறுவ னத்துக்கு சொந்த மான போயிங் 787-8 விமானம் 230 பயணிகள் 12 விமான சிப்பந்திகளுடன் சரியாக மதியம் 1.38 மணிக்கு லண்டன் கற்விக் விமான நிலையம் நோக்கி புறப் பட்டது. ஏஐ171 பயண இலக்கத்துடனான இவ் விமானம், புறப்பட்ட 5 நிமிடங்களில் விபத்துக்குள்ளானது. இந்த விமானத்தில், 169 இந்தியர்கள், 53 பிரித்தானியர், 7 போர்த்துக்கேயருடன், கனடா நாட்டை சேர்ந்த ஒருவரும் பயணித்திருந்தனர்.

விபத்துக்குள்ளான விமானம் வெடித்து முன்பகுதி அங்குள்ள மருத்துவ கல்லூரி மாணவர்களின் விடுதியின் மீது விழுந்தது. மற்றைய பாகம் குடியிருப்பு பகுதியின்மீது விழுந்தது. லண்டன் பயணமான விமானத்தில் எரிபொருள் முழுமையாக நிரப்பப்பட்டிருந்தது. இதனால், விபத்துக்குள்ளான விமானம் மளமளவென்று தீப்பற்றி எரிந்தது.

விபத்தையடுத்து, மீட்பு பணிகள் துரிதப்படுத்தப்பட்டன. 204 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. 41 பேர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்த விபத்தில் மருத்துவ கல்லூரி மாணவர்கள் ஐவரும் உயிரிழந்தனர். காயமடைந்தவர்களில் பெரும்பாலானவர்களும் மருத்துவ கல்லூரி மாணவர்கள் என்று கூறப்படுகிறது.

மேலும், குடியிருப்பு பகுதியில் விமானம் விழுந்ததால் பலியானோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே, இந்த விமானத்தில் பயணித்த பயணி ஒருவர் அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்துள்ளார். பயணி ஒருவர் உயிர் பிழைத்ததை அகமதாபாத் பொலிஸ் ஆணையர் ஜி. எஸ். மாலிக் உறுதி செய்துள்ளார். "11ஏ இருக்கையில் பயணித்த பயணி ஒருவர் உயிரோடு இருப்பதை பொலிஸார் அடையாளம் கண்டனர். இறந்தவர்களின் எண்ணிக்கை குறித்து இப்போது எதுவும் கூற முடியாது. குடியிருப்பு பகுதியில் விமானம் விபத்துக்குள்ளானதால் பலியானவர் எண்ணிக்கை அதிகரிக் கக்கூடும்" என்றும் அவர் கூறினார். ரமேஷ் விஷ்வகுமார் (வயது 38) என்பவரே உயிர் பிழைத்தவர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த விமான விபத்துக்கு இலங்கை உட்பட பல நாடுகளின் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# வவுனியா சிறைச்சாலைக்குள் அதிரடியாக நுழைந்த சி.ஐ.டி.!

## தீவிர விசாரணைகள் முன்னெடுப்பு



வவுனியா, ஜுன் 13

வவுனியா சிறைச்சாலைக்கு சென்ற குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நேற்று வியாழக்கிழமை விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நேற்றுக் காலை சிறைச்சாலைக்குள் நுழைந்த சி.ஐ.டி. குழுவினர் வவுனியா சிறைச்சாலையை சோதனை செய்ததுடன், அங்கு தங்கியிருந்து கடமையில் ஈடுபட்ட அதிகாரிகளிடம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதேநேரம், வவுனியா சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் சிறைச்சாலையில் பணியாற்றும் 10 இற்கும் மேற்பட்டவர்களை அவர்கள் விசாரணைக்காக அனுராதபுரம் அழைத்துச் சென்றுள்ளனர்.

முன்னதாக அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் பேரில் சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பித்தப்பை வெடித்ததில் மருத்துவர் உயிரிழந்தார்

கொழும்பு, ஜுன் 13

வத்துபிட்டிவல ஆதார மருத்துவமனையின் சிறப்பு மருத்துவர் ஒருவர், பித்தப்பை வெடித்ததால் திடீரென உயிரிழந்தார் என கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர் வத்துபிட்டிவல ஆதார மருத்துவமனையின் சிறப்பு கண் அறுவைச் சிகிச்சை நிபுணரான துமிந்த சமன் குமார என்று வத்துபிட்டிவல ஆதார மருத்துவமனையின் மருத்துவ கண்காணிப்பாளர் நயனஜித் பண்டார தெரிவித்தார்.

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் வத்துபிட்டிவல மருத்துவமனையில் சிறப்பு கண் அறுவைச் சிகிச்சை நிபுணராக பணியாற்றி வந்தார்.

மாரடைப்பு காரணமாக கொழும்பு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சிறப்பு மருத்துவர், அறுவைச் சிகிச்சைக்கு தயாராகிக் கொண்டிருந்தபோது, அவரது பித்தப்பை வெடித்து திடீரென இறந்தார் என்று வத்துபிட்டிவல மருத்துவமனையின் மருத்துவ கண்காணிப்பாளர் நயனஜித் பண்டார தெரிவித்தார்.

சடலத்தின் பிரேத பரிசோதனை நேற்று முன் தினம் புதன்கிழமை மதியம் நடைபெற்றது.

கடுவலை, கொரதொட்ட வீதியைச் சேர்ந்த சிறப்பு மருத்துவர் துமிந்த சமன் குமார (வயது-49) இரண்டு குழந்தைகளின் தந்தையாவார்.

வத்துபிட்டிவல மருத்துவமனையில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட 50 ஏழை கண் நோயாளிகளுக்கு 50 உள்விழி லென்ஸ் மாற்று அறுவைச் சிகிச்சைகளை டாக்டர் துமிந்த சமன் குமார இன்று செய்யவிருந்தார். (அ)

## விமானம் கடத்தப்படுவதாக போலியாக கூறியவர் கைது!

கொழும்பு, ஜுன் 13

இந்தோனேசியாவிலிருந்து நாட்டுக்கு வரும் விமானம் கடத்தப்படுவதாக தொலைபேசியில் மூலம் போலி முறைப்பாடு செய்த ஒருவரை வெள்ளவத்தை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 42 வயதுடைய வராவார்.விமான நிலையப் பொலிஸாரிடம் செய்த, குறித்த முறைப்பாடு அரசாங்கத்துக்கு எதிரானது என பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர் வெள்ளவத்தை 33ஆவது பாதையில் உள்ள விடுதியொன்றின் அறையில் தங்கியிருந்த போது கைது செய்யப்பட்டதாக வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## வாகன விபத்துக்கள் ஏற்படக்கூடிய 779 ஆபத்தான இடங்கள் அடையாளம்

கொழும்பு, ஜுன் 13

வாகன விபத்துக்கள் ஏற்படக்கூடிய 779 ஆபத்தான இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகப் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலே இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறுப்பு வாய்ந்த திணைக்களங்களுக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் பயன்படுத்தப்பட்ட பழைய சாரதி உரிமங்களை அகற்றுமாறு அதிகாரிகளிடம் கோரப்பட்டுள்ளதாகவும் பதில் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். (அ)

## புதுப்பிக்கப்படாதுள்ள சாரதி அனுமதிப்பத்திரங்கள் இரத்து?

கொழும்பு, ஜுன் 13

2009 ஆம் ஆண்டுக்கு முன்பு வழங்கப்பட்டு, புதுப்பிக்கப்படாத அனைத்து சாரதி அனுமதிப்பத்திரங்களையும் ரத்து செய்வது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

இது தொடர்பான பரிந்துரை மற்றும் கோரிக்கைகள் பொலிஸ் திணைக்களம் ஊடாக பொலிஸ்மா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி,

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகமே இதற்கு முழுப் பொறுப்பாவதால், இது தொடர்பாக விரைவில் அந்தத் திணைக்களம் ஒரு தீர்மானத்தை எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் தற்போது ஒரு கோடிக்கும் மேற்பட்டோர் சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுள்ளதுடன், அதில் 4 மில்லியனுக்கும் அதிகமானோர் 2009 ஆம் ஆண்டுக்கு முன்பு பெற்ற சாரதி அனுமதிப்பத்திரங்களை வைத்துள்ளனர்.

இவற்றில், இரண்டு மில்லியனுக்கும் அதிகமானோர் கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரங்கள் வைத்துள்ளதால் அவற்றைப் புதுப்பிக்கவேண்டியது கட்டாயம் இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, 2009 ஆம் ஆண்டுக்கு முன்பு பெறப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரங்களை இரத்து செய்யும் புதிய சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (அ)

# இலங்கையில் வடகொரியா போன்ற நிலைமையை தோற்றுவிக்க முயற்சி

## அரசை சாடுகிறது மொட்டுக் கட்சி

கொழும்பு, ஜுன் 13

" அரச நிறுவனங்களின் பிரதானிகளை சிறையில் அடைத்து இலங்கையில் வடகொரியா போன்ற தொரு நிலைமையை தோற்றுவிட்டு ஆட்சியை தக்கவைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் முற்படுகின்றதா என சந்தேகம் எழுந்துள்ளது."

இவ்வாறு பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்நாட்டில் தேசிய பாதுகாப்பு தொடர்பில் செயற்படும் மூன்று நிறுவனங்களின் பிரதானிகள் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர். அல்லது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் சிறையில் இருந்தார். தற்போது சேவையில் இல்லை. சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் பணி இடை நீக்கம் செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள பிரதானிக்கும் இதே நிலைதான் ஏற்பட்டுள்ளது.

நாடொன்றுக்கு இவ்வாறான தொரு சூழ்நிலை ஏற்புடையது அல்ல. இப்படியானதொரு நிலை ஏற்பட்டமை தொடர்பில் அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும். ஏனெனில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் நம்பிக்கையீனம் ஏற்படும்.

சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகளை அவமானத்துக்குட்படுத்தி, சிறையில் அடைப்பதன்மூலம் தற்போதைய நிர்வாக முறைமையை வீழ்த்துவதற்கு அரசாங்கம்முயற்சிக்கின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது.

அரசாங்க நிறுவனங்களின் பிரதானிகளை கைது செய்யும் போது, விளக்கமறியலில் வைக்கும் போது கூடுதல் கரிசனை செலுத்தப்பட வேண்டும்.

ஏனெனில் அத்துறை சார்ந்து நம்பிக்கையீனம் ஏற்பட்டு, கட்டமைப்பு வீழ்ச்சியடையக்கூடும். ஜே.வி.பி. அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பிறகு-எமக்கு கிடைக்கப் பெற்ற அதிகாரத்தை விடமாட்டோம் என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறிவருகின்றனர்.

எனவே, ஜே.வி.பியினர் இலங்கையில் வடகொரியா போன்ற தொரு நிலையை ஏற்படுத்தி தமது சகாக்கள் ஊடாக நாட்டை ஆள முற்படுகின்றனரா என்ற சந்தேகம் எமக்கு எழுந்துள்ளது-என்றார். (அ)

## நீர்க்கட்டணம் உயராது!

கொழும்பு, ஜுன் 13

மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும், நீர்க்கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாது என நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர் அனுர கருணாதிலக்க தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் கருத்துரைத்த அவர், மின்சாரக் கட்டணத்துடன் ஒப்பிடும்போது, நீர் கட்டணத்தை அதிகரிப்பதற்கான அவசியம் இல்லை எனக் குறிப்பிட்டார். செலவுகளை நிர்வகிப்பதுடன், தற்போதைய கட்டணத்திற்கமைய நீரை விநியோகிக்க முடியுமெனவும் அமைச்சர் அனுர கருணாதிலக்க தெரிவித்தார்.

இதேவேளை, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஒப்புதலுக்கமைய, மின்சாரக் கட்டணம் 15 வீதத்தினால் அதிகரிக்கப்பட்டு நேற்று முதல் அமுலுக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பாடசாலை அதிபர்களின் பிரச்னை குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பிரதமர் பணிப்பு!

கொழும்பு, ஜுன் 13

பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் அதிபர்களின் தொழிற்சங்கங்களுக்கு இடையிலான கலந்துரையாடலொன்று கல்வி அமைச்சில் இடம்பெற்றுள்ளது.

வேதன முரண்பாடுகள், பதவி உயர்வு மற்றும் அதிபர்களின் சேவை தொடர்பான பிரச்சினைகள் குறித்து இதன்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த பிரச்னைகள் தொடர்பில் உடனடியாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு, பிரதமர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.06.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.